காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

19—3—72

★

உள்ளே......

நல்ல அறுவடை - கட்சிக்கு! மக்களுக்கு? (தலையங்கம்)

...காலம் இல்லை, அதிகம்! (டாக்டர் அறிஞர் அண்ணா)

பெயரிலே என்ன இருக்கிறது! (சிறப்புக் கட்டுரை)

பூப்பனவெல்லாம் பூவாவதில்லை! (கட்டுரை)

மாமனும், மருமகனும்

விலை 25 காசு

இப்படிக்கு - காமராசர்!

— திருவாரூர் முத்துராமன் —

"அடடாஉன் திறமையினை அறியா மல்நான்
அன்றோர்நாள் ஆர்ப்பரித்தேன்! தாயே என்னை
படகாக்க வேண்டும்இத் தமிழ்நாட் டுக்கே;
பவனிக்கு ஏற்பாடு இன்றே செய்வேன்!

என்மீது ஏதேனும் எரிச்ச லென்றால்
இல்லைநான் காரணமென் றிந்த நேரம்
சொன்னாலும் நம்பிக்கை எழுமா தாயே;
சொல்லிடுவேன் மொரார்ஜியினைக் கேட்டுப் பாரும்!

பாவியந்தப் பட்டீலால் கெட்டுப் போனேன்;
பார்புகழ்ந்த உன்னைப்போய் ஒழிக்கச் சொன்னேன்
மாவிலைக்குள் மறைந்திருந்த கனியே! என்றன்
மன்னிப்பை மனங்கனிந்து ஏற்க வேண்டும்!

ஊர்கூட்டி உனைஒழிக்கச் சொன்ன போதில்
உணரவில்லை! ஊர்கூடி ஒழித்த தெம்மை!
பேர்கேட்டால் பிள்ளையமும் என்பார்! அந்தப்
பேருண்மை எம்வரையில் சரிதான் அந்தோ!

அரசறிய வாழ்ந்தவர்தாம்! அகில முற்றும்
அறியும்படி வாழ்ந்தவர்தாம்! ஆனால் இன்றோ
முரசறைந்து எமைவீழ்த்தி விட்டீர்! எங்கள்
முதுகெலும்பைத் தூளாக்கிப் போட்டு விட்டீர்!

பூண்டோடே ஒழிந்தோம்யாம்! இனியும் எங்கள்
புலம்பலுக்கு இல்லைஇடம்! தாயே என்னைக்
கண்பார்க்க வேண்டுமெனக் கேட்கும் ஏழைக்
காமராசர் இப்படிக்கு; முடித்துக் கொள்வேன்.!!"

பெயரிலே என்ன இருக்கிறது?

காஞ்சிபுரம் விரைவுப் புகைவண்டி கடற்கரையைவிட்டு மெல்ல நகரத் தொடங்கியது. கதவோரம் நின்றிருந்த நண்பர் பூஞ்சோலை, "வாருங்கள்! வாருங்கள்! ஓடி வாருங்கள்" என்று யாரையோ அழைத்தார். இரைக்க இரைக்க வந்து வண்டிக்குள்ளே விழுந்தார்கள் இராபர்ட் சுந்தரும், அப்துல் சமதும். கீழை அரசர் பெருந்தெரு நண்பர் மோகன் வீட்டுத் திருமணத்திற்காக நாங்கள் காஞ்சிபுரம் போய்க் கொண்டிருந்தோம். நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு சந்தித்துக்கொண்ட நாங்கள், எதையெதையோ பேசினோம். பாலாய் பாங்க் பிரச்சினையிலே தொடங்கிய எங்கள் பேச்சு அமெரிக்கா செல்வதாக அறிவித்திருக்கும் இரஷ்யத் தலைவர் குருஷ்சேவின் இராஜதந்திரம் வரை விரிந்து பரந்தது. வண்டி மாம்பலத்தைக் கடந்து சைதாப்பேட்டையை நெருங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று நண்பர் பூஞ்சோலை ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார்.

"நான் தாம்பரத்திற்கும் கடற்கரைக்கும் பருவப் பயணச் சீட்டு வைத்துக்கொண்டு நித்தம் போய் வருகிறேன். இடையிலே உள்ள தொடர் வண்டி நிலையங்களின் பெயர்களின் காரணம் அறிய முயற்சிக்கிறேன், முடியவில்லை. நீங்கள்தான் சொல்லுங்களேன் முத்து, சைதாப்பேட்டை என்று பெயர் வரக் காரணம் என்ன?"

இந்தக் கேள்வி என் சிந்தனைக்குத் தூபமிட்டது; எங்கள் உரையாடலில் ஒரு திருப்பத்தை உருவாக்கியது.

"நான் கேட்ட அளவில், படித்த அளவில் தெரிந்ததை சொல்லுகிறேன். சையத் என்ற ஒரு முஸ்லீம் வீரரின் பெயரால் அவ்வூர் வழங்கப்படுவதாகக் கூறுகிறார்கள்" என்று சொல்லிவிட்டு நண்பர் அப்துல் சமதின் முகக்குறிப்பை நோக்கினேன். பூஞ்சோலையைவிட சமதுதான் தமது வியப்பை அதிகமாகத் தெரிவித்துக்கொண்டார்.

"அடே! அப்படியா? நமக்குத் தெரியவில்லையே இவ்வளவு நாட்கள்! முத்துவை நாம் சந்திக்கும் பொழுதெல்லாம் ஏதாவது புதுச் செய்திகள்—விளக்கங்கள் நமக்குக் கிடைத்துக்கொண்டே இருக்கின்றன."

— "முத்து" —

வண்டியில் பலபேர் எதிரில் என்னை அவர் புகழ்ந்தது பற்றி வெட்கப்பட்டேன். ஆனாலும் விடாமல் தொடர்ந்து கேட்டேன்.

"அதற்குள்ளே முழுமையும் ஆச்சரியப்பட்டு விடாதீர்கள். இன்னும் நிரம்ப இருக்கின்றன. திருச்சிக்குப் போகிற வழியில் 'லால்குடி' என்றொரு ஊர் இருக்கிறதே, அதற்கு அந்தப் பெயர் எப்படி வந்தது தெரியுமா"

'டால்மியாவைப்போல யாராவது மார்வாரி, குஜராத்தி 'லால்' என்ற பெயரோடு இருந்திருப்பார், அவர் பெயரால் அது வழங்கக் கூடும்."

"அதுதான் இல்லை; அந்தஊரின் பழந்தமிழ்ப் பெயர் தவத்துறை! அங்கொரு சின்னஞ்சிறு குன்று இருந்தது. அதன்மேல் கோயில் ஒன்று இருந்தது. அதற்கு அழகிய கோபுரமும் இருந்தது. முஸ்லீம்

25 - 9 - '60-இல் எழுதப்பட்ட கட்டுரை இது. நாடும், நாமும் இன்னமும் இந்த விஷயத்தில் அப்படியேதான் இருக்கிறோம் என்பதற்காக மட்டுமல்ல—

இனியாவது சிந்திக்க வேண்டாமா ? என்பதற்காகவும்தான் இப்போது படைத்திருக்கிறோம்.

நவாபுகளின் கை பிற்காலத்தில் வலுத்த நாளில் அந்த வழியாக வந்த ஒரு அரபு முஸ்லீம் சிவந்த அழகிய கோபுரத்தைக் கண்டு, 'செம்பதுமை' என்று பொருள் படும்படி பார்சி மொழியில் 'லால்குடி' என்று பெயரிட்டார்!"

"ஏதேது! நீங்கள் கடைசியில் ஊர்களின் தமிழ்ப் பெயர்களை மாற்றுவதுதான் முஸ்லீம்களின் வேலை என்று சொல்லிவிடுவீர்கள் போல இருக்கிறதே!—என்று சமது சொன்னார்.

'இல்லை நண்பரே! பிற மொழிக்காரர்களின் ஆதிக்கம் வலுக்கிற பொழுது, தமிழ்மொழியில் எப்படி எல்லாம் மறைமுகமாகச் சிதைவுகள் ஏற்படுகின்றன என்பதற்காகச் சொன்னேன். காஞ்சிபுரத்தருகே வாலாஜாபாத், காவேரிப் பாக்கத்துக்கருகே வாலாஜா பேட்டை, மதுரையருகே கான்சாபுரம், இராமநாதபுரம் மாவட்டத்தில் கான்சாகிபுபுரம், வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஜாவர் பட்டடை, மூர்தானு பட்டடை,

(4-ஆம் பக்கம் பார்க்க)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 19—3—72 | இதழ் 36

நல்ல அறுவடை - கட்சிக்கு! மக்களுக்கு?

சென்ற கிழமை, இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழ் நாடு, உ. பி. நீங்கலாக மற்ற 16 மாநிலங்களுக்கும், 2 யூனியன் பகுதிகளுக்குமாக நடைபெற்று முடிந்திருக்கும் மாநில சட்ட மன்றங்களுக்கான இடைத் தேர்தலில், 14 மாநிலங்களில் இந்திரா காந்தியின் காங்கிரசுக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்து, அங்கெல்லாம் இந்திரா காங்கிரசுக் கட்சியே அமைச்சரவைகள் அமைக்கும் நல்வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றது என்பது உள்ளபடியே வரவேற்கத் தக்கதொரு அம்சமேயாகும். இதனில், இதுவரையில் தீராத் தொல்லையாக இருந்து கொண்டு வந்த மேற்கு வங்கத்தில் இந்திரா கட்சிக்குத்தான் மிகுதியான இடங்கள் கிடைத்திருக்கின்றன.

நடைபெற்று முடிந்திருக்கும் இந்த தேர்தலில் குறிப்பிடத்தக்க அம்சமாக சிண்டிகேட் காங்கிரசுக் கட்சி சரியானபடி தாக்குதலுக்கு ஆளாகி இருப்பது மட்டுமல்லாமல் எட்டுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் அந்தக் கட்சிக்கு ஒரு இடம்கூட கிடைக்காமல் போயிருக்கிறது. இதைப் போலவே, பல மாநிலங்களில் சுதந்திராக் கட்சியும், ஜனசங்கமும், முன்பிருந்த இடங்களைக்கூட கைப்பற்ற முடியாமற் போனதுடன், பல மாநிலங்களில் முழுதாகச் செல்வாக்கற்றுப் போய்விட்ட நிலைமையும் பளிச்சிடுகிறது.

சிண்டிகேட் காங்கிரசின் பெருந் தலைவர்களில் ஒருவர் என்று இன்னமும் சிலரால் கருதப்படும் காமராசர், இதுவரையில் வெளிப்படையாக இந்திரா கட்சிக்கு ஓடிவிடவில்லை யாதலால், அவர் 1971-இல் கூறியபடி, இந்தத் தேர்தலிலும் மாயமந்திரங்கள், தில்லு முல்லுகள், சித்து விளையாட்டுக்கள் நடைபெற்றன என்று கூறமாட்டார் என்பதை நிச்சயம் எதிர்பார்க்கலாம். ரசாயன மையால் புகழ்பெற்றவர்கள்கூட, வாய் திறக்கும் வாய்ப்பேதும் இப்போது இருக்க முடியாது.

இந்தத் தடவை, வாக்காளர்கள் ஒவ்வொருவரும் வாக்குச் சீட்டில் கையெழுத்திடும் புதுமுறை செயல்படுத்தப் பட்டது மட்டுமின்றி, அடிக்கட்டை முறையும் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

எனவே, வாக்குச் சீட்டுக்களில் மோசடி என்று எவரும் குறைகூறும் வாய்ப்பு இல்லாமல் செய்துவிட்டது தேர்தல் கமிஷன்.

எனவே முடிவு பெற்று இருக்கும் தேர்தல், மக்களின் தீர்ப்பு என்று, இந்த முறையேனும், அனைத்துத் தரப்பினரும் தலைவணங்கி ஏற்றுக்கொள்ளும் நெஞ்சுரம் பெறவேண்டும்.

தமிழ் நாடு, கோவா நீங்கலாக அநேகமாக துணைக்கண்டம் முழுவதையும் ஆளும் பொறுப்பு இந்திரா காங்கிரசுக்குக் கொடுக்கப்பட்டுவிட்ட இந்த நேரத்தில், மற்றொன்றையும் நாடு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முடிவு பெற்ற இந்தத் தேர்தலில், மத்தியைப் போலவே, எந்த ஒரு மாநிலத்திலும் எதிர்க் கட்சி என்ற தகுதியினைப் பெற எந்த ஒரு கட்சிக்கும் இயலாது போயிருப்பது, நமது ஜனநாயகத்திலேயே இருந்து கொண்டிருக்கும் மிகப் பெரிய குறைபாடு.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பா ரிலானும் கெடும்" என்பது தமிழ் மறை கூறும் நல்வாக்காகும். எதிர்க் கட்சி இல்லாத ஆளுங் கட்சியின் போக்கு, நாளாக நாளாக இஷ்டம்போலவெல்லாம் தலைவிரித்தாடும் அலங்கோலத்துக்கு ஆட்பட்டுப் போகக்கூடும்.

இந்திரா காங்கிரஸ், அந்த வகையில் தன்னடக்கத்தோடு இருக்கும் என்பதற்கு முன்னுதாரணங்கள் எதுவும் இல்லை.

இன்றைய நிலையில் இந்திரா காங்கிரஸ், எந்தவொரு மாநிலத்திலும் ஸ்தாபன ரீதியாக சரியான அமைப்பாக நிலைப்பெற்றிருக்கவில்லை. அண்மையில் ஏற்பட்ட சில, நாட்டு நிகழ்ச்சிகள் காரணமாக இந்திராகாந்தியின் புகழ், விண்எட்டி நின்று கொண்டிருப்பதனாலேயே, அந்தப் புகழ் ஒளியின் மினுமினுப்பிலேயே இவ்வளவு பெரிய வெற்றியை அந்த அம்மையார் ஈட்டி இருக்கிறார் என்பதுதான் உண்மை என்றாலும், அந்தத் துணிவைப் பெற்றிருக்கும் அவரைப் பாராட்டாமலிருக்க முடியாது.

அவரது துணிவினைப் பாராட்டுகின்ற அதே நேரத்திலேயே, மற்றவர்களை மதியாத மமதைப் போக்கு தலைமை யமைச்சரிடம் மிகுந்து கொண்டிருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டிக் கண்டிக்கவும் வேண்டியிருக்கிறது.

யாருக்கும் தலை வணங்காதது அவரது இயல்பு என்றாலும், நாட்டு நிர்வாகத்தில் "ஏகபோகம்" பெற்றுவிட்டிருக்கிற இந்த நேரத்தில் அந்த இயல்பு மிகுந்து விடுமானால் விளைவுகள் விபரீதமானவைகளாகிவிடும் என்பதைப் பற்றி, இன்னமும் முழுதாக உயிரை விட்டுவிடாத எதிர்க்கட்சிகள் சிந்தித்தாக வேண்டும்.

1971-க்கு முன்பு, உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த நிலையில் இருந்த இந்திரா காந்திக்கும், 1971 பிப்ரவரிக்குப் பிறகு மாறிப் போயிருக்கும் இந்திரா காந்திக்கும் மிகுந்த வேறுபாட்டை நாடு சந்திக்க நேர்ந்தது. அதுபோலவே 1972 மார்ச்சில் மாறிப்போயிருக்கும் இந்திரா காந்தியின் வடிவம், நாட்டைச் சர்வாதிகாரப் போக்கில் கொண்டுபோய் விடாமலிருக்க வேண்டும் என்று எண்ணிப் பார்க்கச் செய்கிறது.

இந்திரா காந்தியின் இனிமையான முழக்கங்கள், நல்ல அறுவடையைத் தந்திருக்கின்றன—தனது கட்சிக்கு. இனி, அந்தக் கட்சி எந்தவகையான வாழ்வை நாட்டுக்குத் தரப்போகிறது? என்பதை இப்போது வினாவாகவே விட்டு வைப்போம்!

—திருவாரூர் முத்துராமன்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்சரபாத் ஆகியவை யெல்லாம் முஸ்லீம் ஆதிக்கத்தின் விளைவான சின்னங்கள்! 'அபாத்' என்றால் பார்ஸியில் நகரம் என்று பொருள்."

இந்த நிலையில் இராபர்ட் சுந்தர் தலையிட்டுச் சொன்னார், "அதோடு இல்லை முத்து! நான் அண்மையில் நாகர்கோயிலை அடுத்த சுசீந்திரம் போயிருந்தேன். அங்குள்ள அற்புதமான உயிர்க்களை ததும்பும் அழகிய பாவை விளக்குச் சிலைகளின் மூக்கையும், மார்பையும் உடைத்தெறிந்திருக்கிறார்கள். பாவைகளின் கையிலிருந்தவிளக்குகளில் செம்பாதிக்குமேல் உடைக்கப்பட்டிருக்கின்றன. அத்தனையும் சென்ற நூற்றாண்டில் முஸ்லிம்கள் செய்த வெறிச் செயல்களாம்; வரலாற்றுக் குறிப்பொன்று படித்தேன்."

"பொதுவாகப் பேசும்பொழுது யாரையும் புண்படுத்தும்படிபேசாதீர்கள். கிறிஸ்தவர்கள் மட்டுமென்ன வாழ்ந்தார்கள்? இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற சுவிசேஷபுரம், பரிசுத்தநகர்,சாயர்புரம், காசாமேஜர்புரம், குற்றால மலையடிவாரத்தில் காசிமேசபுரம் போன்ற ஊர்களின் பெயர்களெல்லாம் மாற்றப்பட, மத அடிப்படையில் கிறித்தவர் கை வலுத்தது தானே காரணம்?"

இராபர்ட்சுந்தரின் முகம் கொஞ்சம் சிறுத்தது. உடனே நான் சொன்னேன், "உங்களைக் குறை கூறுவதாக எண்ணாதீர்கள் சுந்தர்! மொழியளவில், மத அடிப்படையில் நாம் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக் கொடுத்ததன் விளைவு, கால அளவில் எப்படிப் பேருரு எடுத்திருக்கிறது பார்த்தீர்களா? இல்லாவிட்டால் நெல்லையைச் சேர்ந்த 'புலியூர்க் குறிச்சி'க்கு 'டோனாவூர்' என்று ஒரு போர்த்துகீசியன் பெயர் வைப்பானா? கல்லக்குடி டால்மியாபுரம் ஆகுமா?"

பூஞ்சோலை இப்பொழுது சிரித்துக்கொண்டே சொன்னார், "அவர்கள் இருவரையும் ஒரு தாக்குத் தாக்கியாயிற்று இப்பொழுது என் மீது பாய ஆயத்தமாகிறீர்கள் போல இருக்கிறது." என்று.

"இதிலே பாய்வதற்கும் தாக்குவதற்கும் என்ன இருக்கிறது? எனக்கென்ன உங்கள்மீதுகோபமா என்ன? நம் தமிழ்நாட்டின் அழகு தமிழ்ப் பெயர்களெல்லாம் எப்படி சிதைக்கப் பட்டிருக்கின்றன என்பதை அறியும்போது உண்டாகும் வேதனை என்னை அப்படிப் பேச வைக்கிறது. பாருங்களேன், புளியங்காடு என்ற ஊர்ப் பெயர் எவ்வளவு அழகாக இருக்கிறது. அதனைத் திந்திருணிவனம் என்று ஆக்கியிருக்கிறார்கள்! திந்திருணி என்றால் வடமொழியில் புளியைக் குறிக்கும். அந்தத் திந்திருணி வனந்தான் காலப்போக்கில் மருவி திண்டிவனமாக இன்றைக்குக் காட்சியளிக்கிறது.

"எது? புகைவண்டிச் சந்திப் பாகத் தென்னார்க்காடு மாவட்டத்திலே இருக்கிறதே, அந்தத் திண்டிவனமா?"

"ஆமாம். நீங்கள் ஆர்க்காடு என்று சொல்லவே எனக்கு இன்னொன்று நினைவுக்கு வருகிறது. ஆர் (ஆத்தி) மரங்கள் நிறைந்த காடு ஆர்க்காடு. எவ்வளவு தூய்மையாக இருக்கிறது இது. இதனை ஆறுகாடு என்றுஆக்கி, வடமொழியில் ஷடாரண்யம் (ஆறு-ஷட) என்று சாசனங்களில் எழுதத் தொடங்கித் தலபுராணங்கூட எழுதிவிட்டார்கள் போங்களேன்! ஆனாலும் ஏதோ நல்லகாலம் ஆர்க்காடே இன்னும் வழக்கில் நின்று நிலவுகிறது."

"இது மிகவும் அநியாயம். அக்ரமம்"—அப்துல் சமதும், இராபர்ட் சுந்தரும் ஒருமித்த குரலில் கூறினார்கள்.

"கொஞ்சம் பொறுங்கள், ஒரு பட்டியலை நான் தருகிறேன், பிறகு பேசலாம்" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தேன்.

தமிழ்	வடமொழி
பழமலை	— விருத்தாசலம்
திருமறைக்காடு	— வேதாரண்யம்
புள்ளிருக்கு வேளூர்	—வைத்தீஸ்வரன் கோயில்
மயிலாடுதுறை	— மாயவரம் (மயூரபுரம்)
திருக்காளத்தி	— காளஹஸ்தி
குடமூக்கு	— கும்பகோணம்
தகடூர்	— தர்மபுரி
வெண்கோடு	— தவனகிரி
திருப்புவனம்	— புஷ்பவனேஸ்வரம்
ஆரைக்கல்	— நாமக்கல்

இவை வழக்கில் இருப்பவை. இவை தவிர, மாற்ற முயற்சித்து முடியாமல்போய் விட்டு விட்ட ஊர்ப்பெயர்களும் உண்டு. திருவையாற்றைப் பஞ்சநதம் என்றும், திருஇடைமருதூரை மத்தியார்ச்சுனம் என்றும், திருவெண்காட்டைச் சுவேதனம் என்றும் திரித்து வழங்க வேற்று மொழியினர் செய்த முயற்சிகளைத் தேவாரப் பாடல்களும், வேறு சில, சாசனங்களும் தெளிவாகச் சுட்டுகின்றன. ஆயிரத்தில் ஒன்றாக இவற்றை நான் எடுத்துக் காட்டினேன். தமிழகத்தில் இவைபோல் இன்னும் எவ்வளவோ உண்டு. வடமொழியினர் கைவலுத்தபோது —அதுகூடத் தவறு—நம்மவர்கள் கொஞ்சம் தூங்கிவிட்டபோது நிகழ்ந்த சூழ்ச்சியின் விளைவுகள் இவை — திட்டமிட்டுச் செய்யப் பெற்ற பெயர் மாற்றங்கள், இவை."

பூஞ்சோலை பற்களைக் கடித்தார். "அயோக்கியர்கள், வெறியர்கள்!" என்று தன் ஆத்திரத்தைக் கொட்டிக்கொண்டார். பிறகு கேட்டார்.

"ஆமாம் முத்து! இவையெல்லாம் எப்போது நிகழ்ந்தன?"

"நம்மவர்கள் என்று நாம் போற்றுகிறோமே, அந்தச் சேரனும் சோழனும் பாண்டியனும் ஆண்டு வந்த போதே—கலிங்கம் சென்று, கடாரம் வென்று, இமயத்தை வரம்பெடுத்து, கங்கைக்கரை மன்னவர்கள் தோள் எங்கள் தாளின் கீழ் என்ற அளவுக்கெல்லாம் வெற்றிக் கொடி நாட்டிப் பரணி பாடிய காலம் ஒன்று இருந்ததே, அப்போதே — மெல்ல மெல்ல இங்கு வந்து குடியேறி மறைமுகமாக நம் சமுக அமைப்பின் ஆணிவேரில் கைவைத்து அரிக்கத் தொடங்கியது ஒரு கூட்டம், துணை நின்றது அன்னவரின் தாய்மொழியாம் வடமொழி; வழி வகுத்துத் தந்தவர்கள் நம்மவருள் — நம் தமிழருள் சில துரோகிகள்."

"ஆமாம் முத்து! அண்மையிலே ஒருவர் பத்திரிகை யொன்றில்கூட எழுதியிருந்தார், படித்தேன். பிறமொழியினர், பிற நாட்டினர், பிற இனத்தவர் தொடர்பு ஏற்பட்ட பொழுது விழிப்பாக இல்லாமையால் 'நாடிழந்து, நலமிழந்து, கோட்டை யிழந்து கொடியிழந்து நிற்கிற நாம், நம் மொழியையுமா

(12-ஆம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

தம்பி !

...காலம் இல்லை, அதிகம்!

வேதனை கப்பிய நிலையில் இந்தக் கிழமை, உன்னுடன் அளவளாவ
இயலுமா என்பதுபற்றியே, எனக்கு ஐயப்பாடு இருந்துவந்தது. நமது
மாநிலத்துக்கு வெளிப்பகுதிக்கு நாலு நாட்கள் சென்று வரவேண்டி இருந்
தது. சென்னை புறப்படு முன்புதான், தொலைபேசி மூலம், தம்பி கருணாநிதி
குடந்தையிலே நேரிட்ட கோரச் சம்பவம் குறித்துக் கூறக் கேட்டேன்.
உள்ளம் துடித்தது; பறந்து வந்தேன்; நிலைமைகளை விளக்கிக் கூறினர்,
நண்பர்கள், குடந்தை சென்று நேரடியாகவே தகவல்களைக் கேட்டறிந்து.
வருவதாகக் கருணாநிதியும், தர்மலிங்கம் எம்.பி. அவர்களும், கூறிச் சென்றனர்
தகவல் கிடைத்ததும், அறிந்ததை உரைத்திடவும், ஆவன செய்வதற்கு முயற்சி
எடுத்திடவும் காத்துக் கிடக்கிறேன்.

ஒன்று பொதுவாகக் கூறுவேன்—நமது கழகவளர்ச்சி கண்டு, அரசியல் வட்டா
ரங்களிலே எழுந்துள்ள பொருமை, பகை உணர்ச்சியாகி, தீயதோர் தீச்சுழல், தமிழக
மெங்கும், நமது கழகத்தைச் சுற்றி வளையமிட்டது போலிருக்கிறது, என்பதை
நான் உணருவது போலவே நீயும் உணர்ந்திருக்கிருய் என்று எண்ணுகிறேன். இது,
ஒவ்வொரு, அரசியல் கட்சியும், அதிலும் குறிப்பாக விடுதலை இயக்கம், எதிர்பார்த்
துத் தீரவேண்டிய கட்டம்.

நம்மை அலட்சியப்படுத்தினர் அரசியல் மாற்றுர்கள்—நாடு நம்மை எதிர்
கொண்டழைத்தது. சான்ருேர் என்ற
சிறப்புப் பெயருக்கேற்ப, இயல்பு பெற
வேண்டிய சிலர், நிலைகெட்டதால் நினைப்
புக் கெட்டு, நம்மைச் சபித்தனர்—நாடு
நம்மை வாழ்த்தலாயிற்று. பேதமும் பிள
வும் மூளும்; பிய்த்தெறியலாம் என்று
எண்ணினர் சிறுமதி கொண்டு பெருநோக்
குடையாரைச் சாய்த்திட எண்ணிடும்
சதிமதி தெரிந்தோர்—நாமோ தணலைத்
தங்கம் பயன்படுத்திக்கொள்ளும்
தன்மைபோல, எதனையும் நமக்கு
ஆக்கம் தர வல்லது ஆக்கிக்
கொண்டு விட்டோம்.

இனி, இவர்களைச் செல்வாக்
கற்றவர்களாக்குவதும் செயலற்
றவர்களாக்குவதும் இயலாது
என்பதை அவர்கள் உணர்ந்து

> கழக அரசைக் கவிழ்த்தே தீருவோம் என்ற காழ்ப்புணர்ச்சியிலே நெளிந்து கொண்டிருக்கும் காமராசர்கள் அன்றும் இருக்கத்தான் செய்தார்கள். என்றாலும், நமது அரசு அமைவதைத் தடுத்திட எவராலும் அன்றேகூட முடியவில்லை.
>
> இன்றைக்கு முடிந்திடுமா என்ன ? என்று கேட்டால் மட்டும் போதாது. அன்றைய உணர்வை இன்றும், இனி என்றும் பெறவேண்டும் என்பதற்குத் தான் இந்த மடல்.
>
> 21-8-'69-இல் எழுதப்பட்டது.

கொண்டதால், நம்மை உயிரற்றவர்களாக்கிவிடுவது என்று துணிந்து, தாக்கவும் தகர்க்கவும், குத்தவும் வெட்டவும், கொல்லவும், ஏவிவிடும் அளவுக்குச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

தம்பி! உயிரற்றவர் என்பதை, பிணம் என்று பேசுகிறோம்.

ஒருவன் செத்தால், உயிரற்றவனாகிறான் என்று பொதுவாகக் கூறும்போது, அது உண்மைதான்—ஆனால் சாவு வேறு, உயிரற்றுப் போவது என்பது வேறு. தத்துவம் பேசுவதாக எண்ணிக்கொள்ளாதே, தம்பி! உண்மையை உரைக்கிறேன்.

சாகாமலே, உயிரற்றவர்களாகி விட்டவர்கள் உண்டு!

செத்து, உயிரூட்டம் தருபவர்கள் உண்டு.

முன்னவர், கொள்கைப் பற்றற்று, வாழ்க்கைச் சுவையில் மூழ்கி, நாடு, மொழி, இனம் மறந்து கிடக்கும் உருவாரங்கள். உயிர் இருக்கும், உண்ண உறங்க, உறவாட, உரையாட, பொருள் தேட, நடமாட! ஆனால் இனம் வாழ, நாடு பீடுநடை போட, மொழி வாழ, வழி வகுத்திட வேண்டும் என்ற உணர்ச்சி, துடிப்பு, செயலார்வம் அற்றுப் போயிருக்கும்.

அவர்தான், உள்ளபடி, உயிரற்றார்.

கொள்கைக்காகவே வாழ்ந்து, கொடியவரின் கொடுவாளுக்கோ, வஞ்சகரின் வீச்சுக்கோ, அடக்குமுறையின் கோரப் பற்களுக்கோ இரையாகி இறந்துபடும், மாண்பினர், உயிரற்றோர் எனும் பட்டியலில் அல்ல, உயிரூட்டம் தருவோர் வரிசைக்குத் தங்களை உயர்த்திக் கொள்கிறார்கள் என்பதுதான் நாம் போற்றிடத்தக்க பேருண்மையாகும்.

அந்த வரிசையில் ஏற்கனவே, நிரம்ப இடம் பெற்றனர், நமது கழகத்தவர். இனி அந்த வரிசை வளரவேண்டும், என்று, வன்கணாளர்கள், விரும்புகிறார்களோ என்று எண்ணத்தக்க விதமான நாசகால நடவடிக்கைகள் நாள்தோறும் நடைபெற்ற வண்ணம் உள்ளன.

இது, என்னைப் பொறுத்தவரையிலும், என் போன்ற இயல்பினரைப் பொறுத்தவரையிலும், எதனை உணர்த்துகிறது எனின், எந்த நேரத்திலும், எந்த முறையிலும், உயிர்குடிக்கும் பகை நம்மைத் தாக்கி மாய்த்திடக்கூடும்; எனவே, உள்ள நேரத்தை, விரைந்தும் துணிந்தும், முறைப்படுத்தியும் மூலம் கெடாவகையிலும், பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும்; எத்தனை நாள் இந்தப் பணியாற்ற விட்டு வைக்கப்பட்டிருப்போம் என்பதே பிரச்சினையாகி விட்டிருப்பதனால், கிடைக்கும் வாய்ப்புகளைச் செம்மையாகப் பயன்படுத்தி, வீழ்த்தப்படுமுன், விரப் பணியாற்றினேன்! என்று நாம் நமது நெஞ்சத்துக்குக் கூறிக் கொள்ளத்தக்க நிலை பெற்று, பிறகு, நிற்பவரிடம் விழ்வோர், அறப்போர் ஆர்வத்தை, விடுதலை வேட்கையை, ஒப்படைத்துவிட்டு, இவர் என்னினும் செம்மையாகச் செயல்படவல்லார்! என்ற மகிழ்ச்சியுடன், மண்ணில் சாய்ந்திட வேண்டும், என்பதுதான்.

வேலை நிரம்ப இருக்கிறது என்றேன், சென்ற கிழமை—தம்பி! அத்துடன் இதனை இணைத்துக் கொள். காலம் அதிகம் இல்லை!

வேலை நிரம்ப இருக்கிறது, காலம் அதிகம் இல்லை —எனின், சிக்கலன்றோ அதிகப்படும் என்று, சிந்தை குழம்பிக் கிடந்திடும் சிற்றினம் அல்ல, திராவிட இனம்.

வேலை நிரம்ப இருக்கிறது—காலம் அதிகம் இல்லை—எனினும் உறுதிக்குக் குறைவேதுமில்லை—என்பதுதான் முழு உண்மை.

அத்திமரம் கண்டிருக்கிறாயே, தம்பி! மரம் எத்துணை பெரிது—அதிலே காய்த்திடுவது எத்துணை சிறிது! காண்கிறாயல்லவா? அளவுக்காக மட்டுமல்ல, தம்பி! அதனைக் காட்டுவது. மிக எளிதிலே 'சொத்தை'யாகிடத்தக்கது என்பதனையும் கூறத்தான். 'அத்திப் பழத்தைப் புட்டால் அத்தனையும் 'சொத்தை' என்பது பழமொழி. நான் உன்னைக் கவனிக்கச் சொல்வது. அதனை அல்ல; மரம் பெரிது, காய் மிகச் சிறிது.

பூசணைக் கொடி பார்க்கிறாயே, தம்பி! எப்படி இருக்கிறது, உலர்ந்து, சுருண்டு, கீழே வீழ்ந்து கிடக்கிறது—ஆனால் காயோ! மிகப் பெரிது!

அத்தி மரத்தினையும், பூசணைக் கொடியினையும் கண்டறியாதாரிடம், அத்திக் காயினையும், பூசணைக் காயையும் காட்டி, பிறகு மரத்தையும் கொடியையும் காட்டினால், அத்தியைப் பூசணைக் கொடியுடையது என்றும், பூசணைக்காயை அத்திமரம் தந்தது என்றும் கூறுவரன்றோ.

நாம் செயலாற்றிப் பெற்ற சாதனைகள், தம்பி! கொடியிலே காணப்படும் பூசணை போன்றது. காணாதார், நம்பமாட்டார்கள்! கண்டோர், வியப்படையாதிருக்க மாட்டார்கள்.

அத்தி மரத்திலே காய்த்துக் கிடக்கும் கொத்துக் கொத்தான காய்கள்போல, காங்கிரஸ் கட்சியினர், ஆட்சி மன்றங்களிலே, எண்ணிக்கை பலத்துடன் அமர்ந்துள்ளனர். இப்போது அந்தப் பழமொழியை நினைவிற்குக் கொண்டு வா, அத்திப் பழத்தைப் புட்டால் அத்தனையும் சொத்தை.

அப்படியொரு அத்திப் பழத்தைப் புட்டு, சொத்தை எவ்வளவு என்று பார்த்துக்கொண்டிருந்தனர், பெங்களூரில். நான் சென்றபோது ஜட்டி அமைச்சர் அவை எதிர்ப்பாளர்கள் கிளப்பிய புகார்கள் பற்றிய விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கர்னாடக வணிகக் கோட்டப் பெரியவர் ஒருவருடன் உரையாட வாய்ப்புக் கிடைத்தது—அவர் அந்த 'அத்திப் பழ' வேலையாக வந்திருந்தார். அவரிடம், நமது கழகம் செயலாற்றி வருகிற பான்மையினையும், பெற்ற வெற்றிகளையும் எடுத்துக் கூறும்போது, அவர், கொடியிலே, காணப்படும் பூசணைக் காயைத்தான் எண்ணிக் கொண்டிருந்திருப்பார். ஏனெனில் நான் சொல்லச் சொல்ல அவர் இவ்வளவு வேலை நடக்கிறதா? இத்துணை வலிவு இருக்கிறதா? இவ்வளவு ஆதரவு பெருகி வருகிறதா? என்று வியப்புடன் கூறியவண்ணம் இருந்தார்.

நல்லவர் மனதிலே வியப்பும், நாடாள்வோர் மனதிலே விசாரமும், ஏற்படுத்தும் நமது நிலைமை, அழித்தொழிக்கும் முறையை அறமென்று எண்ணிக்கொள்ளும் அளவுக்கு மனம் அழுகிக் கிடப்போருக்கு பகை உணர்ச்சியைத்தான் ஊட்டும்—அதன் விளைவுதான், நமக்கு அவ்வப்போது ஏற்படும், விபத்துகள்.

இவை இனி ஏற்படாது என்ற உத்தரவாதம் தரத்தக்க பெருங்குணமோ, பேராற்றலோ கொண்ட

தாக அரசு இல்லை.

ஆனல், ஒன்று, இவைகளைத் தாங்கிக்கொள்ளும் நெஞ்சுரம் இல்லை என்று கூறிடும், வலிவிழந்தான் எவனும் இங்கு இல்லை.

வெட்ட வருவோனை வீழ்த்தவாகிலும் உரிமை வழங்கலாகாதா என்று வீரம் கொப்பளிக்கும் நிலையில் கேட்டிடும் காளையரைக் காண்கிறேமேயன்றி, விரண்டோடும் போக்கினர் எவரும், இந்த நம் அணி வகுப்பிலே நிச்சயம் இல்லை.

அதோ என் மகன்! வீட்டு வாயற்படியிலே சிறிதளவு குனியாவிட்டால் தலை இடித்துக்கொள்ளும், என்று பெருமிதத்துடன் கூறும் தாய், அந்த அடலேறு, தன் கருவில் இருந்த மணி என்பதுபற்றி எண்ணிடும்போது ஒரு கணம் வியப்பேயன்றோ தோன்றிடும்! நானு, தாங்கி இருந்தேன், இந்த மாவீரனை, என் கருவில்!!—என்றன்றோ எண்ணுவர்.

அஃதேபோல, நமது கழகத்துக்குள்ள, வயது, வரலாறு, வடிவத்தின்அளவு, கிடைத்துள்ள வாய்ப்புகள் இவைகளுடன் நாம் பெற்றுள்ள வெற்றிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பெற்ற மகன்அடலேருகி உலவக்காணும், தாய் மனம், நமது கழகத்திற்கு ஏற்படுகிறது.

பெற்ற மகன் தத்தாரியாகிப் போனதையோ, அல்லது நோய்கொண்டோனுகிக் கிடப்பதையோ காண்பவள், அடலேறு போன்ற மகனை ஈன்றவளைக் காணும்போதே, கடுகடுத்த முகத்தினளாவளன்றோ, இழிகுணம் கொண்டோளாக அவள் இருந்திடின்!

அதுபோன்ற போக்கு, ஆளுங் கட்சிக்கு இன்று—நம்மை நோக்குங்காலை, இழிகுணம் கொண்டோர், அந்த முகாமில் இடம் பெற்றதால், நம்மிடம் அருவருப்புக் காட்டுவதுடன், அழித்திடவும் முயலுகின்றனர்.

ஆகவேதான் தம்பி! மீண்டும் கூறுகிறேன், வேலை இருக்கிறது நிரம்ப! —காலம் இல்லை அதிகம்!—என்பதை.

உள்ளபோதே, உண்மைக்கு உழைத்திட, ஊராருக்குப் பணியாற்றிட, விடுதலைக் கிளர்ச்சிக்கு விறுவிறுப்பூட்ட, தளராது பணியாற்று. பணி முடியுமுன் பாதகரின் சதி, நம்மை வீழ்த்திலுலும், ஐயகோ! அதைச் செய்யாது விட்டோமே! இதைக் கவனியாதிருந்தோமே! என்று எண்ணித் துயறும் நிலையில், நாம் இருந்தாலாகாது. என் கடமையைச் செய்தேன்; குறை வற! நானிருந்தால், தனக்கு வாழ்வில்லை என்று அஞ்சியவன் என்னை வீழ்த்துகிருன், நான் விடைபெற்றுக்கொள்கிறேன்; வேலை இருக்கிறது நிரம்ப! காலம் இல்லை அதிகம்! என்று கூறிவிட்டு, தொடர்ந்து பணியாற்றும் உடன்பிறந்தார்கள் உள்ளனர் அணி அணியாக என்ற எண்ணம், தவழ உயிரூட்டம் தருவோரின் வரிசைக்கு நாம் உயரவேண்டும். அந்த வாய்ப்புப் பெற்றோருக்கு, என் வீர வணக்கம்.

அண்ணன்,

அண்ணாதுரை

நிலம்

★

அறிஞர்தம் மதிவாங்கும் கல்வி போச்சு,
　அமுதமழை நிலம்வாங்கி வளங்கொ டுக்கும்!
வறிஞர்தம் வயிறெருக்கும் பாலை யோடு,
　மருத,முல்லை குறிஞ்சிநெய்தல் நிலங்கள் ஐந்து!
எறிந்தபொருள் அத்தனையும் மேல்நிற் காமல்
　இழுவிசைகொள் நிலத்தாலே கீழே வீழும்!
பிறந்தவுயிர் இனங்களெல்லாம் வாழ்ந்து மாயும்,
　பெற்றிக்கு நிலமடந்தை நிமித்த மன்றோ?

நிலாசுற்றும் நிலமகளே! நிலமோ காயும்
　நெடுங்கதிரைச் சுற்றிவரும்! பகல்இ ருட்டும்
உலாவரலால் பணிபுரிந்தே ஓய்வுகொள்வார்
　உயர்மக்கள்! பலசுளைகள் கொண்டதாலே.
பலாவான பழச்சுவைபோல் பிரிக்க வொன்ணுப்
　பேறுடைத்து மக்களோடு நிலமே! தூங்க
உலாவ,ஓட தாங்கிநிற்கும் நலந்தான் மக்கள்
　உயிருடலாய் விளங்குவது மெய்யே யன்றோ?

மயிலாடு துறைதான் மாறி
　மாயவரம் ஆனதென்னே!
பயிலுங்கால் தகடூர், நாட்கள்
　பட,தரும புரியா பிற்று!
வெயில்படரா புளியங் காடே,
　வழங்குதிண்டி வனமாம் இன்றே!
வியப்புமிகு நிலத்தின் பேர்தான்
　விளங்கும்பல மாற்றம் எய்தி!

நீரின்மேல் ஓடாக் கப்பல்,
　நிலத்தின்மேல் வாய்த்த ஓங்கல்!
தாரில்வாழ் தேனை ஒக்கும்,
　தரையின்கண் வயலின் பச்சை!
காரின்மேல் நிலவின் காய்ச்சல்,
　கழனிக்குள் தண்ணீர்ப் பாய்ச்சல்!
பாரின்மேல் புகழை ஈட்டப்
　பேணவேண்டும் நிலத்தை என்றும்!

மலை,ஆறு தாங்கும் உன்னுள்
　மறைந்தமரம் வைர மாகும்!
விலையாகும் உணவுப் பண்டம்,
　விளைவாகும் நிலத்தால் தானே?
கலையாக மாற்றும் வண்ணம்,
　கலைஞர்க்கும் ஈவாய், உண்மை!
அலையாக வரலாறு ஆய்ந்து
　அறிந்திடுவார் உன்னைத் தோண்டி!

விளைநிலத்தின் வீடு கட்டும்
　வன்னெஞ்சோர் தாங்கும் உன்றன்
தலையடக்கம் சொல்லித் தாராய்!
　துளையிட்டோர் வாழ நீரும்,
வழங்குகின்ற ஈகை என்னே?
　வெய்யோனின் கூட்டாய்ச் சேர்ந்து,
அழகாகச் சுடுகின் றுயே,
　அணியாத காலில் நீயே!

—வலங்கொண்டான்.

மக்கள் அரங்கில் மதிப்பிழந்து போனாலும்....

★

ஊழல், ஊழல் என்று மூலைக்கு மூலை ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறார் பக்தவத்சலம் அவர்கள். அவர் அன்றைக்கு எப்படி இருந்தார் என்பதைப் பற்றி அன்றைய **கண்ணதாசனின்** படப்பிடிப்பு இது. எடுத்துக் காட்டி இருப்பவர் **இரா. கு. இராமசாமி.**

மானம் எனும் வார்த்தை மதிப்பிழந்து போனதற்கு
வழிவகுத்தார் யார்? பக்த வத்சலனார் என்பார்கள்
தானும்மனையும் தழைத்தோங்க வேண்டு மெனும்
தரமான கொள்கையினைத் தன்கொள்கை யாய்க்கொண்டு
வருவார்க்குக் கால்பிடித்து வாய்திறந்து பற்காட்டி
மந்திரியாய் எந்நாளும் வாழ்பவர்கள் இவர்தவிர
வேறெவரும் இல்லை! வீராதி வீரரென
தேர்தலிலே நிற்பார்; ஜெயிப்பதில்லை என்றாலும்
கொல்லைப் புறத்தில் கொடிகட்டி ஏறிடுவார்
மக்கள் அரங்கில் மதிப்பிழந்து போனாலும்
தக்கவரே போலத் தரங்குறைந்த வார்த்தையினால்
எட்டரைப் பேர்கொண்ட எழிலான கூட்டமதில்
வாய்கிழியப் பேசி வருவாரைத் தூங்கவைத்து
பலகார வகைகளிலே பலப்பலவும் ருசிபார்த்து
கர்ப்பிணிபோல் தொந்தி கச்சிதமாய் உருவெடுக்க
சுற்றிச் சுழன்று சூறா வளியெனவே
போவார்; வருவார் போலீசார் துணையுடனே!
அன்றந்த ஸ்ரீராமன் அன்புக்கும் பாத்திரமாய்
இன்றுவரும் ஸ்ரீராமர் எல்லோர்க்கும் நல்லவராய்
அரசியலாம் பெருங்கடலை அரைநொடியில் கடந்துவந்து
சஞ்சீவி பருவதத்தைத் தன்கையில் தான்தாங்கி
பதவியெனும் ஜானகிக்குக் கணையாழி பரிசளித்து
மீட்டுவந்து ஸ்ரீராமன் மின்னார் திருவடியில்
தண்டனிட்டு வால்தூக்கி 'சாமீ' எனப்பணிந்து
'கண்டுவந்தேன் ஜானகியை! காலமெல்லாம் உன்நினைவால்
ஏங்குகிறாள் சாமீ! இதுசமயம் வாருமென
கூட்டியேதோள் சுமந்து குதித்தோடி அன்னவளைக்
காட்டிக் கொடுக்கும் கலிகாலத் 'தூத'ரிவர்
இன்றந்த அனுமந்தன் இருந்தால் இவரைத்தான்
வாரிசு எனக்கொள்வான் மற்றவர்க்குக் கிட்டாது
பிரகாசா வந்தார்; பிரதானம் இவர்வகித்தார்
அடுத்துவந்தார் ஓமாந்தூர்: அவர்தாளில் தண்டனிட்டார்
பாளையத்து ராஜாவைப் பதவிக்காய்க் கால்பிடித்தார்
ஆச்சாரி யார்க்கு அடிவருடும் மந்திரியாய்
காமராஜ் வந்தவுடன் கரங்குழைக்கும் சேவகராய்
வந்தவர்கள் எல்லோர்க்கும் வாழ்க்கைத் துணையானார்!
அடுத்தெவரும் வந்தாலும் அவரவர்க்குத் தக்கதுபோல்
கூனிக் குறுகிக் குணம்பார்த்து மொழிபேசி
பதவி எலும்பைப் பற்றிப் பிடித்திடுவார்
முன்னாள் வரலாற்றை முழுக்கப் படித்தாலும்
இவர்போலத் தமிழ்வீரர் இருந்ததில்லை எனக்காண்போம்
அத்தனையும் சேர்த்து அளந்து கொடுத்துவிட்டு
வெருங்கூடு கொண்டு வீற்றிருக்கும் வத்சலனார்
விரைந்துவரும் தேர்தல் வெங்களத்தில் குதித்தாரேல்
தோல்வியே மீண்டும் துணை!

★

மாமனும், மருமகனும்!

இங்கிலாந்தை ஆண்ட மன்னர்களில் ஒருவரெனும் பெருமையைத் தவிர, அப்படியொன்றும் இரண்டாம் ஜேம்சின் வாழ்க்கை, அத்தனை மகிழ்ச்சி நிறைந்ததாக இல்லை. இந்த மன்னரை, ஒரு கெட்ட அதிஷ்டக்காரர் என்று வர்ணிக்கலாம். ஒரு மன்னரென்றால் எத்தனை கஷ்டங்கள் பட்டு, கெட்டலைய வேண்டியிருக்கிறது என்பதற்கு, இந்த ஜேம்சின் வாழ்க்கையை, ஒரு உதாரணமாகக்கூட எடுத்துக்கொள்ளலாம்.

ஜேம்ஸ் ஒரு கதோலிக்கரானதால், அம்மதத்தைப் புகுத்த தான்தோன்றித்தனமாக நடவடிக்கை எடுத்தும், தம் மதத்தைச் சார்ந்தவருக்கு உத்தியோக தானதருமம் செய்தும், சட்டங்களை வெறும் மரச் சட்டங்களாக மதித்துக் குப்பையில் தூக்கி எறிந்தும். பார்லிமென்டின் தேர்தல்களில் கொக்கரித்துக் கொண்டு தலையிட்டு, பெருங்குழப்பம் உண்டாக்கியும், சர்வ வல்லமையும் பெற்ற மக்களின் ஒருமுகமான கசப்பையும் வெறுப்பையும், ஜேம்ஸ் மூட்டை கட்டிக் கொண்டார். செருக்கோடு அகம்பாவத்தோடு இந்த கெட்ட காரியங்களை, ஆடம்பரமாக இவர் நடத்தி தன்னைப் பாழடித்துக் கொண்டார்.

இங்கிலாந்து மக்களுக்கு தம் உள்நாட்டு விஷயங்களில் தலையிட, ஒரு அயல்நாட்டு மன்னருக்கு வெற்றிலைப் பாக்கு வைத்து வரவேற்பு விழா நடத்த விருப்பமில்லை யென்றாலும், இந்த ஜேம்ஸ் மன்னரின் கெட்ட செயல்களையும், அவர்களால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை.

இங்கிலாந்து மக்கள்' அரச முடியைப் பெற ஜெர்மன் சிற்றரசர்களில் ஒருவரான வில்லியத்திற்கு, மகிழ்ச்சிகரமாக அழைப்பு அனுப்பி வைத்து, அடங்காப்பிடாரியான ஜேம்சுக்குப் பாடம் கற்பிக்கத் தயாராகி விட்டனர். ஜேம்ஸ் இதையெல்லாம் சட்டைசெய்யவில்லை. அவர் எப்போதும் போல் நிமிர்ந்தே நின்றார். நிமிர்ந்தாலென்ன வளையாமலா போய் விடுவார்? நிமிர்ந்தவர் வளைந்தவர் நிமிர்ந்ததும், வரலாற்று உண்மை அல்லவா?.

இரண்டாம் ஜேம்ஸ், வில்லியத்திற்கு மாமனாராக வேண்டும். இந்த மூன்றும் வில்லியம் - ஜேம்சின் மகளைத் திருமணம் செய்து கொண்டிருந்தார், அவள் பெயர் மேரி. ஜேம்ஸ் மன்னரின் முதல் மனைவிக்கும் பிறந்தவள் இவள்.

வில்லியம் - மதிப்பிற்குரிய மாமனாராயிற்றே என்று, இங்கிலாந்து மக்களின் அழைப்பை ஏற்றுக் கொள்ளாமல் விடுவாரா? ஜேம்சுக்கு மருமகப்பிள்ளையான வில்லியம் — கிடைத்த சந்தர்ப்பத்தை எப்படி நழுவவிடுவார்? இங்கிலாந்து அரச முடியைப் பெறுவதென்பது, எத்தனைப் பெருமைக்குரிய விஷயம்? அதிர்ஷ்டம் வில்லியத்தை தேடி வரும்பொழுது — மாமனாராயிற்றே என்று பின் வாங்கி. அவர் எப்படி ஏமாளியாவார்?

இங்கிலாந்து மக்கள் ஜேம்சுக்கு பாடம் கற்பிக்க, அவர் மருமகனையே தயார் செய்து விட்டனர்.

வில்லியத்தின் மனைவி மேரிதானாகட்டும், அன்புத் தந்தைக்கு எதிராகக் கணவன் போர்க் குரல் எழுப்பாமல் தடுக்க — அவளால் ஏதாவது செய்ய முடிந்ததா? அதுதான் இல்லை.

வில்லியம் முப்பத்தையாயிரம் போர்வீரர்களுடன் புறப்பட்டு விட்டார்.

இங்கிலாந்து மக்கள் விரும்பும் ஒரு ஆட்சி முறையை அவர்கள் வகுத்துக் கொள்ள, ஒரு சந்தர்ப்பம் அளிக்கவே தாம் இங்கிலாந்துக்கு வருவதாக. கவர்ச்சி விளம்பரம் ஒன்றை, வில்லியம் தாம் சேனையுடன் புறப்படுவதற்கு முன்னால் வெளியிட்டு, இங்கிலாந்தில் தம்மைப் பற்றிய ஒரு நறுமணத்தை உண்டாக்கினார்.

ஒரு அயல் நாட்டு மன்னன், தம் நாட்டின்மேல் படையெடுத்து வருவதாக, இங்கிலாந்து மக்கள் நினைத்துவிடக் கூடாதென்று, வில்லியம் எச்சரிக்கையாக நடந்து கொண்டார். போர்க்களத்தில் மாமனாரின் படையைச் சந்திக்காமல், ராஜதந்திரமாகக் காரியத்தை முடித்துக் கொள்வதில், வில்லியம் கண்ணாக இருந்தார். இத்தனைக்கும் அவர் படையில், போரையேதொழிலாகக்கொண்ட டச்சுப் படைவீரர்களும், டேனியப் படைவீரர்களும் இருந்தனர். போர் செய்ய வேண்டிய ஒன்றிரண்டு சந்தர்ப்பத்தில் கூட, ஜேம்ஸ் மன்னரின் ஐரிஷ் படைவீரர்களை, வில்லியம் தம் படையிலிருந்த ஆங்கிலப் படை வீரர்களைக் கொண்டே மோத வைத்தார். ஒரு சிறந்த போர்வீரருமான வில்லியத்திற்கு, அந்தந்த நேரத்திற்குப் பொருந்தும் ஒரு யுக்தியைக் கையாண்டு, பக்குவமாக நடந்துகொண்டார்.

மேரி ராணி, தன் ஆசைக் கணவன் வில்லியத்தை, வாழ்த்தி வழியனுப்பி வைத்துவிட்டு, பிறகு தன் ஆருயிர்த் தந்தையை நினைத்துப் பஞ்சணையில் விழுந்து, பட்டுத் தலையணையில் மலர் முகம் புதைத்துக் கண்ணீர்த் துளிகள் சிந்தினாள். அவள் துயரம் வில்லியத்திற்கு எப்படித் தெரியும்? மேரியும் மற்ற பெண்களைப்போல், ரத்தத்தாலும் சதையாலும் நரம்பாலும் உருவானவள்தானே.

பிரெஞ்சு மன்னர் பதினான்காம் லூயி, தம் நண்பர் ஜேம்சுக்கு ஆபத்து வருமுன்னர்க் காக்க, ஒரு படையை உதவிக்கு அனுப்பி வைப்பதாகச் சொல்லியதை, இந்த ஜேம்ஸ் மன்னர் 'நானே என்னைக் காத்துக் கொள்வேன்' என்று வரட்டு ஜம்பம் பேசி, காரியத்தைக் கெடுத்துக் கொண்டார். லூயி, தன்னை எங்கே மட்டமாக நினைத்துக் கொள்வாரோ என்று, இப்படி ஜேம்ஸ் 'மதிப்பாக' நடந்துகொண்டு, நண்பரான லூயியின் சிற்றத்தையும் வாங்கித் தலையில் கட்டிக்கொண்டார். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலாவது, ஜேம்ஸ் சற்று புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளக் கூடாதா?

வில்லியம் கடல் கடந்து 'டார்பே'யில் இறங்கி, மெதுவாக அவர் லண்டனை நோக்கிச் சென்றபொழுது, அவர் மனத்திற்குள் கோட்டை கட்டியிருந்தபடியே, மக்கள் எல்லாரும் அவரை, மகிழ்ச்சியோடு ஆரவாரம் செய்து வரவேற்றனர். வில்லியம் அப்படியே ஆனந்தத்தில் மிதந்து மூழ்கிப் போனார்.

— வி. ஆர். துரை —

ஜேம்ஸ், மருமகப்பிள்ளை வில்லியத்தின் படையை 'சால்ஸ்பெரி' யில் முறியடிக்க, தம் படையை ஆவலோடு திரட்டியது, வெறும் கனவாகப் போய்விடுமென்று அவரென்ன எதிர்பார்த்தாரா? உள்நாட்டிலேயே ஜேம்சுக்கு எதிராகக் கிளர்ச்சி தொடங்கிவிட்டது. ஜேம்சின் படைவீரர்களும், வில்லியத்தின் படையோடு மோத திருப்தி படவில்லை. பிறகு யாரை நம்பி ஜேம்ஸ் போர் தொடுப்பார்? அவருடைய பேராசை இப்படியா முறிந்துவிட வேண்டும்? முகத்தை தொங்க போட்டுக்கொண்டு, ஜேம்ஸ் லண்டனுக்குத் திரும்பிவிட்டது, அவருக்கு இன்னும் பெரிய தவருக முடிந்தது.

ஜேம்சின் வலது கையாக இதுவரைக்கும் இருந்து, அவரிடம் நன்ருகச் சாப்பிட்ட லார்டு சர்ச்சில் என்ற நேர்மையற்ற திறமைசாலி, வில்லியம் கட்சிதான் வெற்றியடையப் போகிறதென்று யூகித்து, இப்பொழுது 'நன்றி' எல்லாம் அடியோடு மறந்துவிட்டு, வில்லியத்தின் பக்கம் சேர்ந்துவிட்டார். எதிர்க் கட்சியில் இருந்தால் என்ன கிடைக்கும்? சிறைவாசம் தான் கிடைக்கும். ஆளும் கட்சியின் பிரசாரப் பீரங்கியாக இருந்தால். தமக்கு எத்தனை விதமான 'சொகுசுகள்' கிடைக்குமென்று கணக்கு போட்டு, சர்ச்சிலெனும் 'பெரிய' மனிதர், ஜேம்சைக் காலை வாரி விட்டு விட்டார். பாவம் ஜேம்ஸ் என்ன பண்ணுவார்?

ஜேம்சின் தலைமேல் எந்த நிமிடத்திலும் ஆபத்தெனும் கத்தி, விழலாம் என்று எதிர்பார்க்கும் இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில், அவருடைய மகள் ஆன் இளவரசி, தந்தையென்று பாராமல் சொல்லிக் கொள்ளாமலேயே, லண்டனை விட்டே ஓடிவிட்டாள். எங்காவது ஓடி தன்னைக் காத்துக் கொள்வதே, இந்தப் பெண்ணிற்கு குறியாகிவிட்டது. 'ஆன்' ஓடிவிட்டதைக் கேள்விப்பட்ட ஜேம்ஸ் மன்னருக்கு, மண்டை குழம்பிற்று. அவர் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். ஜேம்ஸ் தந்தையோடு இருந்து, அவர் கஷ்டத்தைப் பங்கிட்டுக் கொள்ள, மகளுக்கு மனமில்லாமல் போய்விட்டது.

வில்லியத்தின் படையைத் தம்மால் எதிர்க்க முடியுமென்ற தைரியம், ஜேம்சுக்கு இப்பொழுது பரிபூரணமாக இறங்கிக்கொண்டு வந்தது. இராணிக்கும் கைக் குழந்தைக்கும் இனியும் ஏமாருமல், முன்னெச்சரிக்கையாக ஏதாவதொரு வழி செய்தாக வேண்டும். கடைசிவரைக்கும் தன்னைவிட்டுப் பிரியாமலிருக்கும், மனைவியின் அருங் குணத்தை நெஞ்சில் நினைத்த நினைத்தபோது, ஜேம்சின் மனத்திற்கு இன்பமாகவும் ஆறுதலாகவும் இருந்தது.

பிரான்சுக்கு, தம் நண்பர் லூயியிடம் அனுப்பிவைக்கப்போவதாக ஜேம்ஸ் இராணியிடம் சோகமாக தெரிவித்துக் கொண்டபோது, அவள் விழிகளிலிருந்து கண்ணீர்த் துளிகள் கன்னத்தில் இறங்கிற்று. ஜேம்ஸின் விரல்கள் அவரை அறியாமல், மனைவியின் கண்களை நீவிற்று. இராணியின் இடுப்பிலிருந்த கைக்குழந்தைக்கு என்ன புரிந்ததோ, ஆக அது வீர் வீர் என்று கத்திற்று. ஜேம்ஸ் மன்னரின் உலர்ந்த உதடுகள், குழந்தையின் கன்னத்தில் பதிந்தன.

நிமிடத்திற்குநிமிடம் ஜேம்சுக்கு ஆபத்து நெருங்கிக் கொண்டிருந்தது. கப்பலில் மனைவியையும்

அறிக்கை:

"காஞ்சி"

1.	வெளியாகும் இடம்	...	86. திருக்கச்சி நம்பித் தெரு சின்னகாஞ்சிபுரம்.
2.	வெளியிடும் நாட்கள்	...	வாரம் ஒருமுறை
3.	அச்சிடுபவர் பெயர்	...	சி. என். ஏ, இளங்கோவன்
	இனம்	...	தமிழர்
	முகவரி	...	86. திருக்கச்சிநம்பித் தெரு சின்னகாஞ்சிபுரம்.
4.	வெளியிடுப்வர் பெயர்	...	சி. என். ஏ. இளங்கோவன்
	இனம்	...	தமிழர்
	முகவரி	...	86. திருக்கச்சிநம்பித் தெரு
		...	சின்னகாஞ்சிபுரம்.
5.	ஆசிரியர் பெயர்		சி. என். ஏ. இளங்கோவன்
	இனம்		தமிழர்
	முகவரி		86. திருக்கச்சிநம்பித் தெரு சின்னகாஞ்சிபுரம்.
6.	பத்திரிகையின் உரிமையாளர்களுடைய பெயர்களும், முகவரியும் அல்லது பத்திரிகையில் ஒரு சதவிகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவர்களின் பெயர்களும், முகவரியும்.		சி. என். ஏ. இளங்கோவன் 86, திருக்கச்சிநம்பித் தெரு சின்னகாஞ்சிபுரம்.

என் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்தமட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று சி. என். ஏ. இளங்கோவனுகிய நான் அறிவிக்கிறேன்.

19—3—72 (ஒப்பம்) **சி. என். ஏ. இளங்கோவன்,**
வெளியிடுவோர்.

குழந்தையும், பிரான்சுக்குஅனுப்பிவிட்ட ஜேம்சின் நெஞ்சில், மிஞ்சியிருந்தது ஒன்றுமில்லை. அவர் இப்பொழுது தன்னந்தனியே நின்றார். வில்லியத்தின் படையெடுப்புச் சேனை தலைநகரத்தை நெருங்க நெருங்க, ஜேம்சுக்கு கொஞ்சநஞ்சமிருந்த தைரியமும் போய்விட்டது. ஒருநாளிரவு ஜேம்ஸ் இனியும் லண்டனிருந்தால் தலைக்காபத்து என்று பயந்து, யாருக்கும் தெரியாமல் கப்பலில் பிரான்சுக்குக் கிளம்பிவிட்டார்.

வில்லியத்திற்கும் தன் மாமனாரை எப்படிக் கைது செய்வதென்று, மனத்தில் குடைந்து கொண்டுதான் இருந்தது. மருமகனுக்கு அந்த சங்கடமும் வைக்காமல், ஜேம்ஸ் நாசுக்காக நடந்து கொண்டார்.

பாரிசுக்கு குடும்பத்தோடு வந்துவிட்ட தம் நண்பர் ஜேம்சுக்கு, லூயி மன்னர் 'சாங்ழர்மாங்' அரண்மனையைக் கொடுத்து, வருடத்திற்கு செலவுக்கென்று நாற்பதாயிரம் பவுனுக்கும் ஏற்பாடு செய்து, எல்லாரும் ஜேம்சை இங்கிலாந்தின் மன்னராகவே, இனியும் மதிக்க வேண்டுமென்று திட்டம் செய்து, ஜேம்சின் மனத்தை ஆற்றினார். ஆனால் ஜேம்ஸ் மருமகனுக்கு பயந்து நாட்டைவிட்டே ஓடி வந்துவிட்ட அவமானத்தை, எப்படி மறந்துவிடுவார்? சில நிபந்தனைகளுக்குட்பட்ட அரசனும் அரசியுமாக, வில்லியத்திற்கும் அவர் மனைவி மேரிக்கும் முடிசூட்டி இங்கிலாந்து மக்கள் ஆனந்திப்பதைக் கேள்விப்பட்டதும், பாரிசிலிருந்த ஜேம்சுக்கு இன்னும் வயிறு பற்றி எரிந்தது. தம்மை ஒரு 'மாஜி மன்னர்' என்று கிண்டலாக வர்ணிப்பதை, ஜேம்ஸ் எப்படி பொறுத்துக் கொள்வார்?

ஜேம்சுக்கு இழந்த அரச பதவியை, மீண்டும் பெறவேண்டுமென்ற வெறி பிறந்துவிட்டது. இவர் நண்பர் லூயி, தளபதிகளையும் கப்பல்களையும் போர்க்கருவிகளையும், கொடுத்துதவத் தயாராக இருந்தார். ஜேம்சால் சும்மா இருக்கமுடியுமா?

மாமனார் ஜேம்சும் மருமகன் வில்லியமும், 'பால்ன்ஆற்றங்கரை'யில் களத்தில் மோதிக்கொண்டனர். போர்க்களத்தில் வில்லியம் இருமுறை காயம் பட்டார். வில்லியம் இறந்தால் தன் மகள்தானே விதவையாவாள் என்று, ஜேம்ஸ் எங்கே சிந்தித்தார்? இந்த சண்டையில் வில்லியம் இறந்திருந்தால், இழந்த அரியணை ஜேம்சுக்கு மீண்டும் கிடைத்திருக்கும். வில்லியம் போரில் வெற்றியல்லவா அடைந்து விட்டார். இங்கிலாந்தின் மாஜி அரசர் ஜேம்ஸ், மருமகன் சேனைக்குப் பயந்துபோய், ஓடோடியும் சென்று கப்பலேறி அல்லவா, பாரிசுக்கு வந்துவிட்டார்.

லூயி மன்னரே, ஜேம்சை மன்னராக்க எடுத்துக்கொண்ட இரண்டாவது முயற்சியை, ஆங்கிலக் கப்பற்படைத் தலைவர் ரஸ்ஸல், படுதோல்வியடையச் செய்து விட்டார். ஜேம்ஸ் மன்னருக்கு ஆதரவாக, லூயி முப்பதாயிரம் போர் வீரர்களைத் திரட்டி என்ன புண்ணியம்? எங்கே எதிரிகளிடம் பிடிபட்டு விடுமோ என்று பயந்து, அவசர அவசரமாகக் கரையோரம் கொண்டுவந்து தரை தட்டிவிட்ட பன்னிரண்டு பிரெஞ்சுக் கப்பல்களைப் பின்தொடர்ந்து வந்த, ஆங்கிலப் போர்க் கப்பல்கள் சும்மா அடி அடியென்று விரட்டிக் கொண்டு வந்ததோடு நின்றதா? பன்னிரண்டு பிரெஞ்சுக் கப்பல்களையும் அடியோடு கொளுத்தி விட்டுத்தான், அவைகள் எக்காரணத்தோடு வெற்றிமுழக்கமிட்டுத் திரும்பின. கப்பல்கள் தீப்பிடித்து எரியும் இந்தத் துக்ககரமான காட்சியைப் பார்த்து, அதிர்ஷ்டமில்லாத ஜேம்சின் மனம் என்னமாய் வெந்திருக்கும்?

ஜேம்சை இத்தனை தீவிரமாக ஆதரித்த லூயி, வில்லியத்தை இங்கிலாந்து மன்னராக ஒப்புக்கொண்டு, இனிமேல்தான் ஜேம்சுக்கு ஆதரவு காட்டுவதில்லை என்று, ஒரு உடன்படிக்கை மருமகன் வில்லியத்திடம் செய்து கொண்டதை, ஜேம்ஸ் கேள்விப்பட்டபோது, அப்படியே அவர் துடித்துப் பதறிப் போனார்.

வில்லியத்தின் கண்டிப்பான நடத்தையும், அயல்மொழிப் பழக்கமும், தம் டச்சு நண்பர்களுக்கு அவர் வாரி வழங்கும் நன்மைகளும், போர் போரென்று ஒரு வெற்றியில்லாத போரில் நாட்டை பாழடிப்பதும், தங்களுக்குப்பிடிக்கவில்லையென்று. மக்கள் பகிரங்கமாகவே பேசிக்கொண்டனர். தமக்குப் பிடிக்காக ஒரு மன்னராகிவிட்ட வில்லியத்தின்மேல், மக்கள் இந்தக் குற்றங்களை வெறுப்போடு அடுக்கிக் காட்டினர். வில்லியம் இந்த உண்மைகளை எப்படி மறுப்பார்? இந்த இங்கிலாந்து மக்களே இப்படித்தான். ஒருவரை ஆதரிப்பார்கள். திடீரென்று அவரையே எதிர்த்துக்கொள்வார்கள். இதில் நியாயமும் இருக்கும்; அநியாயமும் இருக்கும். எல்லாவற்றுக்கும் இவர்கள் ஒரு நியாயம் வைத்திருப்பார்கள்.

வில்லியம் அன்போடு நேசித்து வந்த அவர் மனைவி மேரி இராணி வேறு இறந்துவிட்டாள். வில்லியத்திற்கு வந்திருக்கும் இந்த கெட்ட நேரத்திலா அவள் கண்ணை மூட வேண்டும்? இவள்மேல் வில்லியம் தன் உயிரையே வைத்திருந்தார்; துக்கத்தில் அவர் மனம் உருகிற்று.

மேரியின் நெஞ்சுக் கூட்டிலிருந்து உயிர் பிரியும் கஷ்டமான நேரத்தில், அவள் கண்களில் தந்தை ஜேம்ஸ் வந்து நின்றார். கண்ணீர்த் துளிகள் உருண்டன, அவள் உயிர் வேதனையோடு பிரிந்தது. பாவம் அவளென்ன செய்வாள்? கணவன் பின்னால் சென்ற அவளை, உலகந்தான் தூற்ற முடியுமா? திருமணத்திற்குப் பின்னால் தந்தையென்பதும் தாயென்பதும், கணவனுக்கு அடுத்த கட்டந்தானே.

ஒரு சமயம் தன் மாமனார் ஜேம்ஸ், ஆருயிர் மனைவியையும் கைக்குழந்தையையும், கப்பலில் பிரான்சுக்கு ஏற்றி அனுப்பிவிட்டு, பொறுக்க முடியாத வேதனையில் நின்றிருந்தமாதிரி, வில்லியம் இப்பொழுது துன்பமெனும் கானகத்தில் தள்ளப்பட்டு, தன்னந்தனியே ஒதுங்கி நின்றார். அவருக்கு இங்கிலாந்தில் இருக்கவே பிடிக்கவில்லை. எல்லாருக்கும் வாழ்க்கையில் மேடு பள்ளம் உண்டென்பது, எத்தனை உண்மையாக இருக்கிறது? வில்லியம் இப்பொழுது பள்ளத்தில் கிடக்கிறார்.

வில்லியத்தின் புகழுக்கு இனிமேல் இறங்கு முகந்தானா?

பாரிசில் சாங்ழர்மாங் அரண்மனையில் வசித்து வரும் மாஜி மன்னர் ஜேம்சுக்கு, இந்த வில்லியத்தின் ஆட்சிமுறை இரகசியங்களை, லண்டனிலிருந்து ஒரு சிலர் அடிக்கடி அனுப்பிக் கொண்டுதானிருந்தனர். ஜேம்ஸ் மீண்டும் வந்து இங்கிலாந்தின் மன்னரானால் அவரிடம் சபாஷ் வாங்க வேண்டுமல்லவா?

வில்லியம் இந்தத் தூதனுப்பும் நபர்களைக் கண்டும் காணாதவர்

போல் நடந்துகொண்டார். பெரிய இடத்துப் பொல்லாப்பு நமக் கெதற்கு என்று வில்லியம், இப்படி பெரும்பத்தாக நடந்துகொண்டார்.

வேதாளம் மறுபடியும் முருங்கை மரம் ஏறிய கதையாக, லூயி மன்னர் பழைய உடன்படிக்கையி லிருந்து பல்டியடித்து, வில்லியத் தோடு எதிர்ப்புப் படலத்தை, மீண்டும் ஜாம் ஜாமென்று தொடங்கிவிட்டார்.

வில்லியத்திற்கு இப்படிப் பல தலை வலிகள் உண்டாகிவிட்டன. மாமனாரின் பழைய கஷ்டங்களை, மருமகனார் இப்பொழுது நன்றாகப் பட்டுக் கொண்டிருந்தார். ஒருவ ருக்குக் கஷ்டமென்று வந்தால், இப்படித்தான் தொடர்ந்தாற் போல் பல கஷ்டங்கள் வந்து, வருத்துக் கொட்டிக்கொள்ளும் போலிருக்கிறது.

பெருமைக்குரிய இங்கிலாந்தின் மன்னராகவீற்றிருந்த இரண்டாம் ஜேம்ஸ், செப்டம்பர் மாதத்தில் ஒருநாள், பாரிசில் சாங்ழர்மாங் அரண்மனையில், ஏறக்குறைய ஒரு அநாதைபோல் இறந்து போனார். அவர் மனைவி, விழிகளில் கண்ணீர் இருக்கும்வரை கணவன் மார்பில் விழுந்து அழுது தீர்த்தாள். ஜேம்ஸ் அந்த ஆருயிர் மனைவிக் கும், அருமை மகனுக்கும் என்ன செய்துவைக்க முடிந்தது?

லூயி மன்னர், தாம் ஜேம்சை ஆதரிப்பதில்லையென்று, தம்மை நம்பி வந்த நண்பருக்கு முன்பு இழைத்த துரோகத்திற்கு கழு வாய் தேடிக் கொள்கிற மாதிரி, இரண்டாம் ஜேம்ஸ் இறந்த சூட் டோடு, அந்த மாஜிமன்னர் மகனை 'இங்கிலாந்தின் மூன்றும் ஜேம்ஸ் மன்னர்' என்று பிரகடனம் செய் தார்.

பதினான்காம் லூயி போன்ற ஒரு வெளிநாட்டு மன்னர், போப் மதத்தைச் சேர்ந்த ஒருவரை, இங் கிலாந்தின் அரசாக நியமிப்பதை, அப்படியே கண்களை மூடிக் கொண்டு ஏற்றுக் கொள்வதற்கு, இங்கிலாந்து மக்களென்ன ஒன்று மறியாத ஏமாளிகளா?

மூன்றும் வில்லியத்தின் பின் னால், இங்கிலாந்து மக்கள் திரண்டு, தோள் தட்டிக் கைகளை உயர்த்தி, போர் போரென்று கரகோஷம் செய்தனர். வில்லியம் இப்பொ ழுது இங்கிலாந்து மக்களுக்கு, ரொம்பவும் வேண்டியவராகி விட் டிருந்தார். அவரென்றால் பிடிக்கா மலும் வெறுப்பாகவும் இருந்தது பழைய கதை.

போரென்றால் வில்லியம் தொடை தட்டிக்கொண்டு கிளம்பி விடுபவராயிற்றே இங்கிலாந்து மக் களின் பேரார்வத்தைக் கண்ட அவருக்கு. ஆனந்தம் கரை புரண் டது. பழைய உற்சாகம் வில்லியத் திற்கு, இப்பொழுது மீண்டும் திரும்பிவிட்டதால், அவரைக் கையில் பிடிக்க முடியவில்லை. பழைய உற்சாகம் திரும்பி வரு வது ஒருபுறம் கிடக்கட்டும், அவ ருடைய பழைய அதிர்ஷ்டம் திரும்பி வர வேண்டாமா?

வில்லியம் போரை எங்கே தொடங்கினார்? அவருக்கிருந்த நுரையீரல் நோய்தான், வில்லியத் தைக் குழிக்கு அனுப்பத் தொடங் கிவிட்டதே! இவரும் தன் மாம னார் ஜேம்சைப்போல், ஒரு பெரிய ஆசையை மனத்தில் வைத்துக் கொண்டு, திடீரென்று இறந்து போனார் குதிரை மேலிருந்து விழுந்து, தோள் எலும்பொன்றை உடைத்துக்கொண்டு, பரிதாபமாக இந்த மனிதர் இறந்துவிட்டார்.

★

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இழக்கவேண்டும்?' என்று. அது உண்மைதான்." அப்துல் சமது பேசினார் இப்படி.

"ஏன் நாம்தான் கண்கூடாகப் பார்க்கிறோமே" இராபர்ட் சுந்தர் தொடங்கினார். "வேண்டுமென்றே இல்லாவிட்டாலும், மொழியின் ஒலிக்கூறு இடந் தராத காரணத் தால் புதுச்சேரி — பாண்டிச்சேரி, தரங்கம்பாடி — ட்ராங்குவபார், தூத்துக்குடி—ட்யூடிகொரின், திரு நெல்வேலி — டின்னவெல்லி, திரு வனந்தபுரம்—டிரிவேண்ட்ரம், பழ வேற்காடு —புலிகட், குற்றாலம் — கோர்ட்டாலம், திருவல்லிக்கேணி —ட்ரிப்ளிகேன், நாகபட்டினம் — நேகபடாம் என்றெல்லாம் சிதைந்து வழங்கவில்லையா? உண் மையிலேயே இடைக்காலத்தில் நாம் கொஞ்சம் எதிர்ப்பைக் காட்டியிருந்தால், இந்தச் சிதைவு களைத் தடுத்திருக்கலாம். இனியா வது நாம் கொஞ்சம் விழிப்பாக இருக்கவேண்டும்."

உடனே நான் சொன்னேன். "தென்னகத்தின் வருங்கால வர லாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறித்துக் காட்டப்பட இருக் கும் மானஉணர்ச்சி நிறைந்த, வீரச்சுவை செறிந்த போராட்டம் மும்முனைப் போராட்டம். அம் மும்முனையில் ஒரு முனை நல்ல தமிழ்ச்சொல் கல்லக்குடியை டால் மியாபுரம் என்று மாற்றி வைத்த மறைமுகமான வெறிதனத்தை— எதேச்சாதிகாரத்தைச் சுட்டிக் காட்டி எதிர்த்தழிப்பது. மாற்றுக் கட்சிக்காரர்களும்,மதிமிக்க மந்திரி களும் அப்போழுது என்ன சொன் னார்கள்? 'பெயரிலே என்ன இருக் கிறது? இதற்கு ஒரு போராட் டமா' என்றுதானே கிண்டல் பேசினார்கள், இப்போது இந்தி வந்துகொண்டிருக்கும் வேகத் தைப் பார்க்கிறோமே! இனியுமா நாம் வாளா இருப்பது?"

"வாளாஇருப்பதாவது! முத லில் அரசியல் சட்டத்தை ஏற்ற வகையில் திருத்தி அமைத்தாக வேண்டும். அடுத்து நம் நாடு தமிழகம் என்ற பெயரால் சட்ட பூர்வமாக அழைக்கப்படவேண் டும், இல்லாவிட்டால் வடபுலத் தாரின் மொழிஆதிக்கத்திலிருந்து நம்மை நாம் மீட்டுக்கொண்ட தாகச் சொல்லவே முடியாது."

"அதையேதான் நானும் சொல்லுகிறேன். இல்லாவிட்டால் மறைமுகமாகவாவது இந்தி இங்கு வரத்தான் செய்யும்; மூல்தான் புரங்கள், பஜாஜ் நகர்கள், கோயங்கா பேட்டைகள் தோன் றிக்கொண்டு தான் இருக்கும். எல்லாத் தமிழர்களுமே கட்சி வேறுபாடு இல்லாமல் இதை எதிர்த்தாலொழிய நமக்கு விடிவே இல்லை."

"தமிழறிஞர்கள், வணிகத்துறை யினர் போன்றோர் இதில் பெரிதும் அக்கறை காட்டவேண்டும்."

"ஓரளவுமறைமுகமாக அவர்கள் செய்துதான் வருகிறார்கள். இவ் வளவு நேரம் நான் ஊர்ப்பெயர் களுக்கு விளக்கங்கள் கூறி வந் தேனே, அவைகூட பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவரின் ஆராய்ச்சிக் கருத்துக்களையும், வேறு சில ஆவணங்களையும் ஆதாரமாகக் கொண்டதுதான், ஆனால் அவர்கள் நேரில் வந்து தமிழின் ஆக்கத்துக்குப் பணிபுரிய வேண்டும்" என்றேன் நான்.

இப்படி தத்தித் தத்திச் செல் லும் தமிழனின் வாழ்க்கைநிலையை எண்ணிப் பெருமூச்செறிந்தவாறு வண்டி செங்கற்பட்டு (செங்கழு நீர்ப்பற்று) நிலையத்தில் நுழைந் தது. நண்பர்கள் காப்பி அருந்த இறங்கினார்கள். எங்கள் உரையா டலும் அத்துடன் முடிந்தது. *

பூப்பனவெல்லாம் பூவாவதில்லை!

(புலவர் தி. நா. அறிவு ஒளி)

சிறந்த சான்றோர்கள் தம்மையறியாமலேயேயும் உலகுக்குச் சிறந்த அறிவுரைகளை வழங்குகின்றனர். இலக்கியம் படைக்கும் புலவர் பெருமக்கள் வாழ்க்கை ஆராய்ச்சியாளர்கள்; அவர்கள்தம் வாழ்வாய்வில் கண்ட அரும்பெரும் உண்மைகளையும், உணர்வுகளையும் தம் பாக்களில் - படைப்புக்களில் - வெளியிடுகின்றனர். கழக கால அவ்வையார் எட்டுத்தொகை நூல்களில் ஐம்பத்தொன்பது பாக்கள் பாடியுள்ளார். அப்பாக்களிற் புறப்பொருளும் அகப்பொருளும் பயில்கின்றன. இப்பாக்களிற் சிலவற்றில் நுண்மையாகவும், வெளிப்படையாகவும் நல்ல அறிவுரைகளை அவ்வையார் அளித்துள்ளார்.

ஒருவரோடு நட்பு கொள்கிறோம். முதன்முதலில் பழகும்போது அவருக்கு மிக்க மதிப்பும் சிறப்பும் அளித்துப் பேசி அன்போடு பழகுவோம். அவர் உள்ளம் உவக்குமாறு இனிமையாகப் பேசி உதவிகள் செய்வோம். அவர் உள்ளத்தைக் கவர்வது நம் முதற் கடமையாக இருக்கும். அவரிடம் பழகிப் பழகி மிக நெருங்கியவராக ஆகிவிட்ட பின், முன்னிருந்த நிலை மாறிவிடும். இத்தகைய வாழ்வு நிலையை நன்கறிந்துள்ளார் அவ்வையார். உண்மையான அன்பு வாழ்க்கை - நட்பு வாழ்க்கை - எது என உணர்த்த விரும்பிய அப் புலமைச் செல்வியார், ஒரு நாள் சென்றாலும், இரண்டு நாட்கள் சென்றாலும், அன்றி அளவற்ற முறை வந்து பழகினாலும், தனியாக வந்தாலும்; தன்னோடு பலரை உடனழைத்து வந்து விருந்தாகத் தங்கிப் பழகினாலும் முதன்முதலில் நட்பு துவங்கும் போது எத்தகைய பெருவிருப்பு - பேரன்பு - கொண்டிருந்தோமோ; அத்தகு பேரன்போடு திகழ்பவரே உண்மை நண்பர்; அத்தகு வாழ்வே உண்மையான அன்பு வாழ்க்கை என்று அறிவுரை தருகிறார். இந்தப் பண்பார்ந்த நட்பு வாழ்க்கை மேற்கொண்டொழுகியவன் அதியமான் நெடுமான் அஞ்சி. அவனைப் பாராட்டுமுகத்தான், அஞ்சியின் அருமைப் பண்பைப் பாராட்டி, அதன் வழி அரிய அறிவுரையையும் நூற்றியொன்றாம் புறநானூற்றுப் பாடலின் வாயிலாக நல்குகிறார்:

"ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ!" (புறம்: 101

அறிவும் ஆற்றலும் வயதைப் பொருத்ததன்று. இளைஞர்களிடம் பேரறிவும் பேராற்றலும் விளங்குதல் இயற்கையே. ஆயின், இந்நுட்பத்தை உலகினர் உணர்வதில்லை. முதியோர் அறிவிலும் ஆற்றலிலும் முதியோரே என நம்பி மயங்குகின்றவர்கள் இன்று போல் பண்டும் இருந்தமை கண்டார் அவ்வையார்.

வயதில் 'சிறியோர் எண்றெண்ணி யாரையும் இகழக்கூடாது. அவர்கள் செயலாற்றல் காரணமாக அமையும் நுண்ணிய வாய பல்வினைகளையும் எண்ணி, மதிக்கவேண்டும். அவ்வாறு ஆராய்ந்தறியாமல் போலி இகழ்ச்சியால் மகிழ்ந்து செருக்குபவர் அச் சிறியோரிடமும் தோல்வியடைய நேரும்' என்ற அறிவுரையைப் புறநானூறு 104-ஆம் பாடலில் கூறுகிறார்:

"... ... ... என்னை
நுண்பல் கரும நினையாது
இளையன் என்று இகழின் பெறல்அரிது ஆடே"

அதியமானை இளைஞன் என்றிகழ்ந்து எள்ளிய முதுபெரு மன்னர்க்கு அறிவு கூறும் பாடல் இது. ஒருவன் ஒரு வினையைச் செய்ய வேண்டிய முறையையும் இப்பாடலால் அறிவுறுத்துகிறார். ஒரு வினையை நுண்ணிதாகவும், பல்வகை யாற்றலோடும் ஆற்றவேண்டும் என்ற செய்முறையை' நுண்பல் கருமம்' என்ற தொடரால் உணர்த்துவது கருதத்தக்கதாம்.

இக் கருத்தைத் திருக்குறளில் "உருவு கண்டு எள்ளாமைவேண்டும் உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து" (667) என்ற குறட்பாவில் வள்ளுவரும் அறிவுறுத்தியுள்ளார்.

பெரியோர் தாம் செய்வதற்கு உரிய கடமையைப் பிற ஓர் அளவை வைத்து ஆராய்ந்து செய்ய முற்படாமல், தம் தகுதிக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வகையில் மிகப்பெரிய அளவில் செய்வது உலகியல்பு. இவ்வியல்பை அறிந்த அவ்வையார் "பெரியோர் தம் கடமையைச் செய்யும்போது 'இன்ன அளவு செய்தால் போதும்' என்று வரையறுத்துச் செய்யமாட்டார்கள். மாறாகத் தம்மியில்புக்கேற்பப் பெரிய அளவில் உலகு வியக்குமாறே செய்வர் என்ற அரிய கருத்தைப் புறம் 140-ஆம் பாடலில், "போற்றார் அம்ம பெரியோர் தம் கடனே" என்ற பாடலடியால் உணர்த்தியுள்ளார்.

தம் தகுதிக்கேற்ற செயல் செய்வதுதான் பெரியோர்க்கழகு. பிறர்நிலைக்கேற்ப செய்யாமல் தம் ஆற்றல் முழுமையாகப் புலப்படுமாறு ஈவது வள்ளல்களுக்கியல்பு' என்ற உண்மைகளை நன்கு தெளிவாக்கியுள்ளார்.

'இந்நிலவுலகில் சில இடங்களில் நிலம் பள்ளமாக உள்ளன; சில இடங்களில் நிலம் மேடாக (மலை முதலிய உருவில்) உள்ளன. நிலத்தின் உருவத் தோற்றம் எவ்வாறாக இருப்பினும் அது குறித்துக் கவலை இல்லை. அவ்வந்நிலத்தில் வாழும் மக்கள் — ஆடவர் — நல்லவர்களாக இருந்தால், அந்நிலமும் நல்ல நிலமாக அமையும். மக்கள் தீயரானால் அந் நிலமும் தீயநிலம் எனத் தூற்றப்படும். மருத நிலமானாலும், முல்லை நிலமானாலும், நெய்தல் நிலமானாலும், குறிஞ்சி நிலமானாலும் ஆங்குள்ள ஆடவர்களால், தலைவர்களால் — மன்பதையை யியக்கும் முதல்வர்களால்-தான் நிலத்துக்கு நன்மை அமையும். ஆகவே நல்லஆடவர்கள், நல்ல தலைவர்கள் உலகநன்மைக்கு நனி இன்றியமையாதவர்களாவர்! என்ற அரிய அறிவுரையை அவ்வையார் புறம் 187-ஆம் டாடலில் நல்குகிறார்:

இலக்கியம்

"நாடாக ஒன்றோ காடாக ஒன்றோ
அவலாக ஒன்றோ மிசையாக ஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."

நற்பண்பும் நற்செயலும் உடையவர்களாக மக்கள் விளங்கினல் தான் நாடு, நன்னடாக அமையும்; உலகு, நல்லுலகாக அமையும். இக்காலத்துக்கு மிக மிக இன்றியமையாத அறிவுரையை அளிக்கும் பாடல் இது. அறிவியலில் சிரிய நாடாயினும், தொழில் வளத்தில் சிறந்த நாடாயினும், ஆட்சி வல்லமையில் உயர்ந்த நாடாயினும், செல்வத்தில் சிரிய நாடாயினும், வேறு எதில் சிறப்புடைய நாடாயினும் ஆண்டுறையும் மக்கள் நல்லோராக விளங்க வேண்டும். அப்போதுதான் இந்நாநிலமும் வாழும்!' என நுண்பொருள் தரும் இவ்வுலகப் பாட்டு ஒப்பற்ற அறிவுப் பாட்டாம்.

'உலகில் புகழ் பெற்றோரும், அறிஞர்களும் பலர் வாழ்ந்திருந்து இறந்து படுகின்றனர். அவர்கள் இறந்து விடுவது ஓரளவு வருந்துதற்குரியதே. அவர்களால் கிடைக்கும் பயன் உலகுக்குக் கிட்டாமல் போய்விடுவது பேரிழப்பே யாயினும், அன்னர் மறைவால் ஈடு செய்ய முடியாத துன்பமோ—குறையோ உண்டாவதில்லை அறிவும் புகழும் உடையவர்கள் இல்லாக் குறையை நீக்க வேறு அறிஞர்களும் புகழுடையோரும் உலகில் புதிது புதிதாகத் தோன்றிக்கொண்டே இருக்கின்றனர். இஃது இயற்கையின் இடையருத கடமையே.' என்ற அரிய உண்மையை,

"அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே."

(புறம்: 206)

—என அழகாக உணர்த்துகிறார் தமிழ்ப் பெருமாட்டியார்.

உலகில் புகழ் பெற்றவர் ஒருவர் இறந்துவிட்டால், உண்மையாகவோ போலியாகவோ, "அவர் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு" எனப் புனைந்துரை பலப் பலக் கூறிப் புகழ்வது நாள் வழக்காக அமைந்திருக்கிறது. அக்குறையைச் சுட்டிக் காட்டித் திருத்துகிறார் நுண்மாண் நுழை புலம் சான்ற பெண்மான் புலவர் அவ்வையார்!

அறிவுடையோர், வண்மையாளர்களை அணுகி அவர்களுக்குச் சிரிய அறிவுரைகளை உள்ளத்தில் நிலைபெறச் செய்து, அப்பணியால் தாம் எண்ணிய நன்மைகளைச் செயலாக்கத்தில் ஆக்கக்கூடிய ஆற்றல் மிக்க உள்ளத்தினராவர். அத்தகு அறிவுடையோர் —புலமைச் செல்வர்—உலகின் எந்தத் திசையிலுள்ள நாட்டுக்குச் சென்றாலும், அந்த நாட்டில் சிறப்போடு வாழ முடியும். அறிஞர்கட்குத் தன்னாட்டில் மட்டுமின்றி எந்நாட்டிலும் சீரும் சிறப்பும் செல்வமும் செல்வாக்கும் ஆற்றலும் கிட்டும் என்ற உண்மையைப் புறநானூறு 206-ஆம் பாடலில் தெளிவாக அவ்வையார் அறிவுறுத்துகிறார்.

'வள்ளியோர் செவி முதல் வயங்கு மொழி வித்தித் தாம், உள்ளியது முடிக்கும் உரனுடையுள்ளத்து' அறிஞர் பெருமக்கள், "எத்திசை செலினும் அத்திசைச் சோறே" எனக் கூறிய அவ்வையாரின் அழுத்தந் திருத்தமான ஆர்வ அறிவுரை அன்றும் இன்றும் என்றும் வாய்மையாகும்.

'அறிவுடையோர் உலக முழுமைக்கும் உரியோர்' என்ற அருங் கருத்தை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தெளிவாக அறிவுறுத்தி யருளிய அவ்வையாரின் திருவுளக் கருத்தின் சீர்மையை எண்ணி உணரவேண்டும்.

நண்பர்—உறவினர் என் அமைவோரில் பலர் இன்பத்தில் பங்கு கொண்டு துணையாவர். ஆனல், துன்பத்தில் பங்கு பெற்றுத் துணையாக மாட்டார்கள். இவ்வுலகியல் உண்மையை உற்றுணர்ந்த அவ்வையார், உள்ளத்துள் அவ்வாழ்வுணர்வைப் பதித்து வைத்திருந்திருக்கிறார்.

அதியமான் நெடுமான் அஞ்சி, தான் அன்பு செலுத்தியவர்கள் இன்புறுவதற்காகவே தன் வாழ்க்கையை ஆளாக்கி வந்திருக்கிறன். ஓரளவே உண்பொருளும், உவகைப் பொருளும் பெற்றாலும், அனைத்தையும் பிறர்க்கே கொடுத்துவிட்டுத் தான் ஒன்றும் உண்ணமல் துறந்துவிடுவான், உண்பொருள் மிகுதியாய் இருந்தால் பிறர்க் களிப்பதோடு, தானும் உண்டு மகிழ்வான். அவ்வாறு சிறிது வயிற்றுக் குணவு ஈயும் போதும் செவிக் குணவாகிய பண்ணிசைப் பாட்டைப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்வான்! உணவு குறைவாக இருந்தாலும் பல பேருக்குக் கலங்களில் பகுத்தளித் துண்பிப்பான். உணவு மிகுதியாக இருந்தால் மிகப் பலருக்குப் பகுத்தளித்து



அவர்கள் உண்பதைக் கண்டு உவப்பவன் அதியமான். இத்தகைய வள்ளல் அதியமான் போர் வரின், (துன்பம் வரின்) மற்றவர்களுக்கு ஊறு நேராவண்ணம் காக்கத் தானே போரிடையே புகுந்து, தன் பேராண்மை காட்டிப் பகையை வென்றொழிக்கும் மற மாண்புடையவனுவான்."

இவ்வாறு அதியமான் நெடுமான் அஞ்சியின் அரும்பெரும் பண்பு நலனைப் பாராட்டுமாற்ருன், உலகினர்க்கு அவ்வழகுப் பண்பு நலன்களை உள்ளத்தில் நன்கு பதியுமாறு அறிவுறுத்துகிருர் அவ்வையார் :

" சிறியகள் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகள் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந்து உண்ணுமன்னே
சிறுசோற்ருனு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ் சோற்ருனு நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கு ஈயுமன்னே
அம்பொடு வேல் நுழைவழியெல்லாம் தான் நிற்குமன்னே "

(புறம்: 235

'தன்னலனைவிடப் பிறர்நலன் போற்றும் அருளாண்மையும், அறவுணர்வும் செல்வம் குறைந்த போதும் - நிறைந்தபோதும் - பிறர்க்கீயும் வரையா வள்ளன்மையும், இன்பத்தில் பங்கு பெருதபோதும் பிறர் துன்பத்தைக் களைவதில் முன் நிற்கும் கடமையாற்றலும் பெற்றிருப்பவனே போற்றற்குரியவன்' என்ற கருத்தை உணர்ச்சித் துடிப்போடு அவ்வையார் அறிவுறுத்துகிருர்.

'போராட்டத்தில் பின்னடைவோர் பலர், ஓடி ஒளிவோர் பலர்; போருக்கு மற்றவரை ஏகவிட்டு ஒதுங்கிக் கொள்வோர் பலர் உலகில் உண்டு. இவ்வியல்பு ஆண்மை வாய்ந்ததன்று. துன்பந் தருவ தாயினும் போராட்டத்தில் முன்னே நின்று எதிர்த்து வெல்வதே பேராண்மையும் பேராற்றலும் புகழும் தரும்' என்ற கருத்தை ஈற்றடியால் அழகாகப் புலவர் தெளிவாக்குகிருர்.

'அழகிய சொற்களை ஆண்டு, நுண்ணிய ஆராய்ச்சிக் கருத்தை நுண்ணயத்தோடு வெளியிடுபவரே புலவர் பெருமக்கள்' எனப் புலவர்கட்கு இலக்கணம் வகுத்துக் கூறுகிருர்: "அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர்" என்ற தொடர்மிகச் சீரியதாம்.

உலகில் மரஞ்செடி கொடிகளில் நாடோறும் எண்ணமுடியாத அளவுக்குப் பூக்கள் பூக்கின்றன. அத்தனைப் பூக்களும் சூட்டிக்கொள்ளப் பயன்படுவதில்லை; ஒருசில பூக்களே சூடப்பயன்படுகின்றன. பிற பூக்கள் வீணுக வாடியுலர்ந்து அழிகின்றன. அது போல உலகில் பிறந்த கோடிக் கணக்கான மக்கள் பிறர்க்கு ஒரு பொருளும் உதவாமலும் அதனுல் வரும் பயனைப் பெருமலும் உயிர் வாழ்க்கையை வீணுக்குபவர்களாகவே உள்ளனர். ஒரு சில நல்லவர்களே பிறர்க்கு உதவி செய்து கொடைவள்ளல்களாகப் புகழ் பெற்றுத் திகழ்கின்றனர். என அழகாகப் பிறர்க்கென வாழும் வாழ்க்கையே வாழ்வாங்கு வாழும் உயர் வாழ்க்கை" என்ற அறிவுரையை அருளியுள்ளார்.

"பனித்துறைப் பகன்றை நறைக் கொள் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க் கொன்று
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே."

(புறம்: 235)

பயன்படுதலே வாழ்வின் நோக்கம்! என்பதையும், நுண்மையாகப் பெறவைத்த அவ்வையாரின் புலமைநயம் நனிசீரியதாம். 'அஃறிணைப் பொருளாயினும் உயர்திணை மக்களாயினும் பயன்பட வாழ்தலே சிறப்பு' என்ற நுண்மையை அவ்வையார் அழகாகப் பாடியுள்ளார்.

உலக வாழ்க்கையில் கைக்கொண்டொழுக வேண்டிய நெறியை மிக அழகாக அவ்வையார் அறிவுறுத்துகிருர் புறம். 367-ஆம் பாடலில் :

"நாடாளும் தலைவர்களாக இருப்பினும், தம் செல்வமும் செல்வாக்கும் என்றும் நிலைத்து நிற்கும் எனக் கருதுதல் ஆகாது. தம்மினும் வலியுடையோர் வந்தால் அவர்கட்கு உரிமையாவதும் இயல்பே. ஆகவே அறிஞர்கள், சான்ருேர்கட்குப் பூவும் பொன்னும் நல்கிச் சிறப்பிக்க வேண்டும். மகளிர் பொன் கலத்தில் அளிக்கும் சுவைநீர் பருகி இன்புறவேண்டும். இரவலர்க்கு அரிய பொருட்களைக் குறைவறக் கொடுத்துப் பிறர்க்குதவ வேண்டும். இவ்வுலகில் வாழவேண்டி வரையறுத்த முறைமையில் வாழ வேண்டும். நாம் இறக்கும்போது நமக்குத் துணையாக அமைவது நாம் செய்த நல்வினைகளைத் தவிர, வேறு எதுவுமில்லை. அந்நிலை பெற்ற நல்வினையே நம் புகழ் வாழச் செய்யும்; நம் பெயரை உலகில் நிலை நிறுத்தும்' என்ற கருத்துள்ள புறப் பாடல் இதோ :

வாழ்க்கையின் உண்மையைச் சுட்டிக் காட்டி, வாழவேண்டி முறையையும், வகுத்துணர்த்தும் அவ்வையாரின் கருத்து அறிவுறுத்தும் முறையும் திறனும் நுண்மையான அறிவுரையாகத் திகழ்கின்றது. பொழுது போக்கும் வாழ்வுக்கு வேண்டும் என்பதையும் அறிவுறுத்தியமை கருதுதற்குரித்தாம்.

" நாகத்தன்ன பாகார் மண்டிலம்
தமவே ஆயினுந் தம்மொடு செல்லா
வேற்ருேர் ஆயினு நோற்ருேர்க் கொழியும்
ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
நாரரி தேறல் மாந்தி மகிழ்சிறந்து
இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டும். இவண் வரைந்த வைகல்,
வாழச் செய்த நல்வினை யல்லது
ஆழுங் காலைப் புணை பிறிது இல்லை."

(புறம்: 367

வாழ்க்கை இலக்கியம் படைத்த அவ்வையாரின் அறிவுரைகள் இந்நூற்ருண்டு வாழ்க்கைக்கும் வேண்டிய இன்றியமையாத பொன்னுரைகளாம். சீர் சிறக்கும் அவ்வையாரின் செவ்வுரைகளைக் கற்றுணர்ந்தொழுகுதல் பண்புடையார் நற்கடனுகும்.

★

எனக்குப் பிடித்தது

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுதான்.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகளை வாங்குவதே எனது பழக்கம்.

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒரு லட்சம் ரூபாய் பரிசு பெறுங்கள்.

மொத்தப் பரிசுத் தொகை ரூ. **10,50,000** *

மொத்த பரிசுகள் 3198

மொத்த வரிசைகள் : மூன்று

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய் (ஒவ்வொரு வரிசைக்கும்)



குலுக்கல் நாள்: **30-3-1972**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை: ரூ. 1/-

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை 278 லட்சாதிபதிகளை உ[illegible]து!

கூடுதல் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை 2.

விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

*3 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.